


அன்பார்ந்த

# சாயி

அடியார்களுக்கு ......

நந்தி

# அன்பார்ந்த

# சாயி

# அடியார்களுக்கு....

நந்தி

பகவான் ஸ்ரீ சத்ய சாயி சேவா சமித்தி

யாழ்ப்பாணம்

அன்பார்ந்த சாயி அடியார்களுக்கு

ANPARNTHA SAI ADIYARKALUKU

(collection of short religious talks)

நந்தி

NANTHI

முதல் பதிப்பு டிசம்பர் 1992

FIRST EDITION DEC. 1992.

294.507

அச்சிட்டோர்: ராஜன் பிரிண்டர்ஸ், கொழும்பு–2

Printers; Rajan Printers, Colombo-2.

வெளியீடு:

பகவான் ஸ்ரீ சத்ய சாயி சேவா சமித்தி
யாழ்ப்பாணம்,

Publisher:

Bagawan Sri Sathya Sai Seva Samithi, Jaffna.

# உள்ளடக்கம்

முகவுரை

1. பகவான் பாபாவும் நல்வாழ்வும் 1
2. அவதாரமும் உபதேசமும் 5
3. அன்பு 10
4. சேவை 15
5. தியானம் 19
6. ஆத்ம சாதனையில் 'ஓம்' 24
7. நாமஸ்மரணை 27
8. ஆசைகளைக் கட்டுப்படுத்துதல் 32
9. பாபாவின் பிறந்த நாள் வேண்டுகோள்கள் 38

REFERENCES 47

na.

Om Sai Ram

## SRI SATHYA SAI ORGANISATIONS
## CENTRAL CO - ORDINATOR

### Region - 10

### Sri Lanka.

## முகவுரை

பேராசிரியர் வைத்திய கலாநிதி சிவஞானசுந்தரம் (எழுத்தாளர் உலகத்தில் "நந்தி") அவர்கள் நல்லூரில் உள்ள சத்திய சாயி பஜனை நிலையத்தில் சிலகாலமாக வாராந்த பஜனை முடிவில் பகவான் பாபாவின் போதனைகளை விளக்கி ஒரு பத்து நிமிடம் அங்கு கூடியிருக்கும் சாயி அடியார்கள் மத்தியில் பேசிக் கொண்டு வருகிறார்கள். இந்தப் பேச்சை ஒரு விரதமாகக் கருதி, தனக்கே சொந்தமான இனிய தமிழில், தனிச்சிறப்புடைய உச்சரிப்பில், சிறு பிள்ளைகளும் விளங்கக்கூடிய பாணியில் பேராசிரியர் அவர்கள் செய்து வருவதைக் கேட்ட பலர் இப்பேச்சுக்களை காலத்துக்குக் காலம் நூல் வடிவில் வெளியிட்டால் பயன் தரும் என்று ஆசைப்பட்டனர், இதையறிந்த பேராசிரியர் அவர்கள் தானே மனமுவந்து "அன்பார்ந்த சாயி அடியார்களுக்கு" என்ற தலைப்பில் இந் நூலை வெளியிடுகிறார்கள்.

பகவானின் சொற்களையே பந்திகளாக பல நூல்களிலிருந்து தெரிந்தெடுத்து, குறிப்புகள் மூலம் எடுக்கப்பட்ட நூலையும் காட்டி தனது பேச்சுக்களில் பேராசிரியர் சேர்த்திருக்கின்றார்கள். எதை எழுதினாலென்ன, பேசினாலென்ன, இது மக்களின் நல் வாழ்க்கைக்கு உதவுமா என்பதை நன்கு ஆராய்ந்தே செய்யும் மனப்பாங்கு உடையவர்.

சாயி நிறுவனங்களால் விரும்பி அழைக்கப்படும் பேச்சாளர்களில் ஒருவர். அகில இலங்கை சத்தியசாயி மனித மேம்பாட்டுக் கல்வி இயக்குனர் குழுவின் ஓர் அங்கத்தவர். இயற்கையாகவே ஒரு பேராசிரியர்.

சத்திய சாயி நிலையங்களில் பஜனையின் பின் நடாத்தப்படும் பத்து நிமிடப் பேச்சுக்களுக்கு இந்நூல் ஒரு கைநூலாகவும் அமையக் கூடியது என்பதை மனதில் கொண்டு யாழ்ப்பாணம் பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா சமித்தியினர் இந்நூலை வெளியிடுவதற்கு மகிழ்ச்சியுடன் ஆதரவு கொடுத்திருக்கிறார்கள்.

அன்பே தெய்வம்

ஜெய் சாயிராம்

14 (40) வைமன் றோட்<br>
யாழ்ப்பாணம்<br>
2-10-1992

செ. சிவஞானம்<br>
மத்திய இணைப்பாளர்<br>
இலங்கை

## பேச்சு 1 : பகவான் பாபாவும் நல்வாழ்வும்

அன்பார்ந்த சாயி அடியார்களே,

இந்தத் தலைமுறையினரைச் சேர்ந்த நாம் பெரும் பாக்கியசாலிகள். மனித உடலிலே ஒரு தெய்வம், அவதாரம் எடுத்து வாழும் காலத்திலே, நாமும் வாழக் கூடிய அரிய வாய்ப்பைப் பெற்றிருக்கிறோம். பகவான் ஸ்ரீ சத்திய சாய்பாபாவின் இந்த அவதாரம் அவரது 96 ஆவது வயது வரை இருப்பதாக அவரே அறிவித்திருக்கிறார்.[1] ஆகவே, நமது சந்ததி மட்டும் அல்ல, இளைய தலைமுறையினரும், 'நாம் ஒரு தெய்வத்தைப் பார்த்தோம், அவர் அறிவுரைகளைக் கேட்டோம், அவர் வாழ்ந்த காலத்தில் வாழ்ந்தோம்' என்று கூறக்கூடிய அதிஷ்டம் உடையவராவர். உண்மையில் நமது இந்த வாழ்க்கையை, நாம் அனைவரும் செய்த தவத்தின் புண்ணிய பலன் என்று தான் கொள்ளவேண்டும். இதிலும் பார்க்கச் சிறந்த பேறு ஒருவருக்கு என்ன வேண்டும்?.

பாபா தம்மை ஓர் அவதாரம் என்று காட்டிய காலங்களிலே எடுத்துக் கொண்ட தகைமைகளும், அருளிய அற்புதங்களும், புரிந்த பேரானந்த லீலைகளும் பலவாகும். ஒரு கவிஞனாக, நடிகனாக, நாடக ஆசிரியராக, சங்கீத வித்துவானாக, விளையாட்டு வீரராக, தலைமைச் சாரணராக இந்த பால பாபா, பின்பு தமது அடியார்களின் துன்பங்களைத் தீர்க்கும் பொருட்டும், அவர்களை மகிழ்விக்கும் பொருட்டும், ஒரு தாயாக, மருத்துவ மாதுவாக, வைத்தியராக, சேர்ஜனாக, பொறியியல் வல்லுநராக, இவ்வாறு பல வேறு திருவுருப் பெற்றுள்ளார். இப்போது கூட, பகவான் அவ்வப்போது ! ஆங்காங்கே, தமக்கே உரித்தான வினோதத்தின் நிமித்தம், அற்புதங்கள் பல,

பல விதங்களில் காட்டி வருகின்றார்; என்றாலும் இன்று அவர் எமக்கு அன்பும் சத்தியமும் நிறைந்த ஒரு வாழ்வைக் காட்டும் **சத்திய போதகராகவும்**, எமது தவறுகளை மன்னித்துப் புனிதமாக்கும் **பிரேம ஸ்வரூபியாகவும்** தான் எம்மை வழிநடத்துகின்றார்.

பகவான் தமது 21 ஆவது வயதில் அவரது தமையன் சேஷ ராஜுவுக்கு எழுதிய கடிதத்தில் பின்வருமாறு தெரிவிக்கின்றார்:

> 'எனக்கு ஒரு வேலை இருக்கிறது; மனித குலம் முழுவதையும் பேணுவதும் அவர்களது வாழ்க்கை முழுவதும் ஆனந்தம் நிறைந்து காணுமாறு நிச்சயப் படுத்துவதுமே. எனக்கு ஒரு பிரதிக்ஞை உண்டு, நேர் பாதையில் இருந்து விலகிச் செல்லும் எல்லோரையும் மீளவும் நல்வழிக்கு இட்டுச் செல்வதும், பாதுகாப்பதுமே. என்னிடம் பற்றுக் கொண்டவர்களை நான் ஒரு போதும் கைவிட மாட்டேன்'.[2]

ஆம், பகவான் எம்மை ஒருபோதும் கைவிடமாட்டார். அவரிடம் பற்றுக் கொள்வதற்குச் சிறந்த வழி, அவர் போதனைகளின்படி வாழ்க்கை நடத்துவதே ஆகும்; ஏனெனில் அவை அமுத வாக்குகள், அருள் மொழிகள், கடவுளின் கனிவுக் குரல்கள்; பகவானின் அன்பையும் அருளையும் நிரம்பப் பெற்ற அமரர் ஸ்ரீ கஸ்தூரி கூறுவார்:

> 'பாபாவின் உரையாடல் ஒவ்வொன்றும் எமது கண்களைத் திறப்பன; வாழ்க்கையில் ஒழுங்கு காட்டுவன; நினைவூட்டுவன; ஞாபக சத்தியைக் கூர்மையாக்குவன வாழ்க்கையைக் காப்பாற்றுவன' என்று[3].

தமது நான்காவது வயதிலே புட்டபர்த்தியின் பெரியவர்களால் குருவாகவும், பத்து வயதிலே பரமஞானியாகவும் அனைவராலும் போற்றப்பட்ட பாபா, தமது 14 ஆவது வயதிலே (1940 இல்)

> 'நான் சத்தியத்தைப் போதிக்க வந்த **சத்திய போதகர்** என்றும்; மனித குலத்திற்கு எங்கும் ஆத்மீக ஆனந்தம் அளிக்கவே மனிதனாக அவதரித்தேன்.'

என்றும் கூறியுள்ளார்.[4]

**சாயி அடியார்களே!**

தனிப்பட்ட முறையிலும், சாய் அமைப்பின் வழி முறைகளில் இயங்கும் வேளையிலும், நாம் பகவானுடன் பலவாறு பக்தி கொண்டுள்ளோம். நாமஸ்மரணம், தியானம், வீடுகளில் வழிபாடு, கூட்டு பஜனை, நகர சங்கீர்த்தனம், நாராயண சேவை இப்படியாகப் பல வழிகளில் பகவானைத் தொழுகின்றோம். தனிமையிலும் சரி, குடும்பத்தினருடன் அல்லது அடியார்களுடனும் சரி, சில நிமிடங்கள் பகவானின் அறிவுரைகளை ஆழ்ந்து அனுபவிப்பது இந்த வழிபாடுகளில் தலை சிறந்தது என்பது பெரியோர்களின் கருத்தாகும். அப்படி அநுபவிப்பதன் மூலம் பாபாவின் புனித அவதாரத்துடன் எமது வாழ்வையும் பிணைத்துச் சாய் வாழ்வு என்ற தூய்மையான வாழ்வை வாழ முடியும்.

**ஒழுக்கம்**

மனித வாழ்வு பற்றிப் பகவான் பின்வருமாறு கூறுகிறார்:

> 'பரிணாம வளர்ச்சியில், சந்தேகமின்றி மனித உயிர் தான் அதி உயர்ந்தது ஆகும். இந்த வாழ்விற்கு அர்த்தம் தருவதற்குத் தூய்மையான புனிதமான ஆத்மீக சாதனை அவசியமாகும். இத்தகைய வாழ்விற்கு **ஒழுக்கம்** மிகவும் முக்கியமாகும். ஒழுக்கம் வாழ்விற்கு அழியாத் தன்மை தருகிறது: அது மரணமான பின்பும் நிலைத்து நிற்பது. சிலர் கூறுகின்றார்கள் கல்வி அறிவு தான் சக்தி தருவது என்று; இது சரியல்ல. ஒழுக்கமே ஒருவருக்கு சக்தி தருவது.

நல்ல ஒழுக்கம் இல்லாவிடில் அறிவைக் கூடப் பெற முடியாது. ஆகவே ஒருவர் துன்மார்க்கத்தின் அடையாளமே இல்லாத குற்றமற்ற ஒழுக்கத்தைப் பேண வேண்டும்' [5]

புத்தரும், யேசுவும், சங்கராச்சாரியாரும், விவேகானந்தரும், கடவுளின் அடியார்களான பல முனிவர்களும், துறவிகளும் இப்போதும் மனிதனால் பொன்னெனப் போற்றப்படுகிறார்கள் என்றுபாபா உதாரணம் காட்டுகிறார்.

'அவர்களின் ஒழுக்கம் தான் அவர்களின் போற்றுதற்குரிய குணம். அதனால் தான் அவர்களை மறக்க முடியாது' [6] என்று பாபா கூறுகிறார்.

நல்ல செயல்களைச் செய்வது, நல்ல வாழ்வு வாழ்வது- இவை பற்றிப் பகவான் கூறுவது பின்வருமாறு:

'பலர் நல்ல செயல்களைச் செய்வதன் மூலம் நல்ல வாழ்வு வாழ எண்ணுகிறார்கள்; ஆனால் அப்படி நான் எண்ணவில்லை. நல்ல செயல்கள் மூலம் நல்லவர்களாக வர முடியாது. நீங்கள் நல்லவர்களாக இருந்தால் தான் உங்கள் செயலும் பேச்சும் நல்லவையாக இருக்க முடியும். ஆகவே, முதலில் நல்லவர்களாக இருக்க முயலுங்கள்' 7

இந்த மாசு இல்லாத ஒழுக்க வாழ்விற்கு அன்பு, பொறுமை, இரக்கம், உறுதியான மனம், தர்ம சிந்தனை ஆகியன அடிப்படையாவன. இவற்றை நாம் போற்ற வேண்டும்.[8] பகவான் பாபாவின் போதனைகள் அன்பின் அடிப்படையில், சத்தியம் தர்மம் ஆகிய குண இயல்புகளுடன் சாந்தி அடையும் வாழ்வைக் காட்டுவனவாக அமையும். அவற்றைத் தெரிந்திருப்பது, ஆழ்ந்து அநுபவிப்பது. அவ்வழிச் சாதனையில் ஈடுபடுவது சாய் வாழ்விற்கு அவசியமாகிறது.

ஜெய் சாய் ராம்

## பேச்சு 2 : அவதாரமும் உபதேசமும்

அன்பார்ந்த சாயி அடியார்களே,

பகவான் பாபாவின் அடியார்களின் வாழ்விலே, எத்துணைச் சிறிய நிகழ்வு ஆனாலும், அதனை அவரின் தெய்விக அன்பும், அருளும் அறிவுரையும் வழிநடத்துவதை, ஒவ்வொரு அடியாரும் மிகவும் நுண்மையாக உணர்வது உண்டு.

பகவானின் தெய்விகத்தையும், அந்த அவதாரத்தின் நோக்கத்தையும் மேற்கொண்டுள்ள பணியையும் அறிந்தவர்கள் அவருடைய வழிநடத்துதலால் மேலும் அதிக இன்பமும் பயனும் அடைவர். இவற்றைப் பகவானே பல சந்தர்ப்பங்களில் விளக்கியுள்ளார்.

முதலாவது அறிவிப்பு 1940 ஆம் வருடம் மே மாதம் 23 ஆம் திகதி நிகழ்ந்தது. 'நீ யார்? பரமனா? பசாசமா? வைத்தியமா?' என்று அவர் அப்பா பெத்த வெங்கப்பராஜு கேட்ட கேள்விக்கு 'நான் தான் சாயி பாபா' என்று பதிலளித்தார் பகவான் பாபா; அப்போது அவர் வெறும் சத்தியநாராயணா தான். 'நான் ஆபஸ்தம்ப ஸூத்திரத்தையும் பாரத்வாஜ கோத்திரத்தையும் சேர்ந்தவன். நான் உங்களின் கஷ்டங்களைத் தடுத்து நிறுத்தவே வந்துள்ளேன். உங்கள் வீடுகளையும் மனத்தையும் தூய்மையாக வைத்திருங்கள். என்னை வியாழக்கிழமைகளில் வணங்குங்கள்' என்றும் கூறினார்.[1]

சாயி அடியார்களுக்கு 1940 ஒக்றோபர் 20 உம் மறக்க முடியாத ஒரு நாள். அன்று பாபா திட்டவட்டமாகத் தமது அண்ணிக்குப் பின்வருமாறு தெரிவித்தார்; அது உலகிற்கும் அவரது பிரகடனமும் ஆகும்.

'நான் இனிமேல் உங்கள் சத்தியா அல்ல. நான் தான் சாயி. நான் போகிறேன். நான் உங்களுக்கு உரிமையானவன் அல்ல. மாயை போய்விட்டது. எனது பக்தர்கள் என்னை அழைக்கிறார்கள். எனக்கு எனது பணி உண்டு.' பாபாவுக்கு அப்போது 14 வயது. அன்று தான் பாபா தனது முதலாவது பிரார்த்தனையையும் அறிவித்தார்.

மானஸ பஜரே குருசரணம்
துஸ்தர பவஸா கர தரணம்

அதாவது, 'குருவின் பாதங்களில் அடைக்கலம் கொள்ளுங்கள். அதுவே நீங்கள் கஷ்டமான சம்ஸாரக் கடலைத் தாண்ட உதவுவதாகும்' என்பதாகும். [2]

அன்று முதல் பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபா தமது தெய்விகத் தன்மையையும் பணியையும் அவ்வப்போது அடியார்களுக்கு அறிவித்திருக்கின்றார். அவற்றுள் சில பின்வருமாறு ;

'என்னை அளப்பதற்கு முயலாதீர்கள்; அது உங்களால் இயலாது. உங்களையே அளக்க முயலுங்கள்.'

'நான் தவம் புரிவதில்லை; தியானிப்பதும் இல்லை. நான் யோகியோ, சித்தனோ சாதகனோ இல்லை. நான் சகல சாதகரையும் வழி நடத்தி ஆசீர்வதிக்கவே வந்துள்ளேன். நான் ஆணுமல்ல பெண்ணுமல்ல; வயோதிபனுமல்ல இளைஞனுமல்ல; நான் இவை எல்லாமே.'

'என்னை நீங்கள் புகழ வேண்டாம். என்னைப் பயமில்லாமல், உரிமையுடன் அணுகுங்கள். நீங்கள் உங்கள் தந்தையைப் பாராட்டுவதில்லை அல்லவா? அவரிடம் உரிமையுடன்தானே எதையும் வேண்டுவீர்கள்?'

'நான் இந்த உலகிற்கு அழைக்கப்படாமல் வரவில்லை; சாதுக்கள், ரிஷிகள், முனிவர்கள், எல்லாத் தேசத்திலும்

எல்லா கோட்பாடுகளையும் அநுசரிக்கும் நல்ல மனிதர் ஆகியோர் மன்றாடிக் கேட்டதனால், நான் வந்துள்ளேன்.'

'சத்தியத்தின் மூலமும் அன்பின் மூலமும் மனித குலத்திலே ஆத்மிக சீர்திருத்தத்தை ஆக்குவதே எனது பணியாகும்.'

'என்னை நோக்கி நீங்கள் ஒரு அடி எடுத்து வைத்தால், நான் உங்களை நோக்கி மூன்று அடிகள் எடுத்து வைப்பேன்.'

'மிகவும் அதிகமான துன்பத்தைச் சுமப்பவர் என்னிடம் வரும்போது தான் நான் மிகவும் மகிழ்சியடைகிறேன்; ஏனெனில் என்னிடமிருந்து அவர்தாம் அதிகம் பெறக்கூடியவர்.'[3]

இப்படியாக உலகிற்குத் தம்மைத் தெரிவித்த பாபா, பக்தர்கள் உள்ளத்திலே நம்பிக்கையைப் பதிய வைப்பதற்கு அற்புதங்கள் புரிந்தாரெனிலும், அவர் மிகவும் கண்டிப்பான தலைவர். அவர் எம்மிடம் நேர்மையும் ஆத்ம ஒழுக்கத்தை அடைவதற்கு உண்மையான முயற்சியும் நூற்றிற்கு நூறு சதவீதம் இல்லையேல் திருப்தியடையமாட்டார். இதனாலேதான், அவருடைய அற்புதங்கள் பற்றிய கதைகளைக் கேட்டு அறிந்து, முதன் முறையாக அவருடைய தெய்விகத்தைக் கருத்தில் கொண்ட பல ஆண்களும் பெண்களும் அவரிடம் இருந்து விடுபடுவதுண்டு. அவர்களால் பகவான் எதிர்பார்க்கும் ஒழுக்கச் சீர் திருத்தம், தன்னலமறுப்பு (renunciation) சாதனை, ஜெபம், தியானம் இவற்றிற்கு ஈடு கொடுக்க முடிவதில்லை. பாபாவைப் பொறுத்தவரையில் இத்தகைய ஒழுக்கம் மிகவும் முக்கியமானது ஆகும்.

பாபா எமது உடலுக்கு ஏற்படக் கூடிய விபத்துக்களைத் தடுப்பது, தீவிர நோய்களைக் குணப்படுத்துவது,

பிரச்சினைகளைத் தீர்ப்பது, ஆறுதல் அளிப்பது எல்லாம், அவருடைய தரிசனத்தின் பின் இயல்பாகவே ஒருவர் சாதனையை அடைவதற்கு முதற்படியாகத்தான்.[4]

சிறு பிரச்சினைகளுக்கு எல்லாம் மனச் சலனமடையும் பக்தர்களைப் பாபா கண்டிப்பதுண்டு. சாந்தி பெறுவதற்குச் சிறந்த வழி ஜெபத்தில் மனத்தை ஒரு முகப்படுத்துவது தான் என்று அவர்களுக்கு பாபா அறிவுரை கூறுவார்.[5]

ஜெபத்துடன் தியானமும் தினசரி ஒழுக்கத்துக்கு இன்றியமையாதது: அந்த ஒழுக்கம் இளம் வயதிலேயே ஆரம்பமாக வேண்டும் என்று எப்பொழுதும் வலியுறுத்துவார்.[6]

எவ்வளவுதான் கண்டிப்பாக அவர் பேசினாலும், பாபா கருணையே உருவானவர். மன்னிப்பதில் தாயுமானவர் என்பது அவரது கூற்றுக்களிலிருந்து அடியார்கள் அறியமுடியும். அவர் கூறியவற்றைப் படிக்கும் போதெல்லாம் உள்ளம் உவகை அடைகின்றது; உயிர் பாதுகாப்புப் பெறுகின்றது.

> 'நான் எல்லோருடையவும் சேவகன். என்னை எந்தப் பெயருடனும் அழைக்கலாம். நான் விடை தருவேன், ஏனெனில் எல்லா நாமங்களும் என்னுடையவையே......' 'நீங்கள் என்னை ஒதுக்கினாலும், நான் உங்கள் பின்னால் இருப்பேன்'[7]

ஒரு முறை மதராஸில் கோகலே ஹோலிலே பாபா கருத்துரை வழங்கி முடிந்ததும், சில பக்தர்கள் சபையோரைப் புட்டபர்த்திக்குச் சென்று அங்கே நடைபெறும் அற்புதமான பஜனைகளில் பங்குகொள்ளுமாறு கூறினார்களாம். அதைக் கேட்டதும் பாபா உடனடியாக அந்த வேண்டுகோளைத் திருத்தினார்:

'இல்லை, இல்லை. நீங்கள் உங்கள் இடங்களிலேயே இருங்கள்; நான் உங்களிடம் வருகிறேன்: உங்களால் இயலாத செலவு எதற்கு? நீங்கள் என்னை அழைத்தால் நான் உங்கள் பக்கத்தில் இருப்பேன்.'[8]

ஆம், பக்தர்களால் அவர் எங்கே வணங்கப்படுகிறாரோ, எங்கே ஞாபகத்தில் உள்ளாரோ, அங்கே பாபா இருப்பார். அதனுடன் அவருடைய அருளைச்சாதனை, ஒழுக்கமான வாழ்வு, தன்னடக்கம், தன்னலமற்ற சேவை இவற்றினால் பெறமுடியும் என்பதை நாம் அறிந்திருக்க வேண்டும்.

ஒரு பிறந்த நாள் வைபவத்தில் பாபா பக்தர்களுக்கு கூறினார்: 'வாடப் போகும் மலர்களையும், அழுகக் கூடிய பழங்களையும், சருகாகப் போகும் இலைகளையும், ஆவியாகப் போகும் நீரையும் எனக்கு அளித்து எனது அருளைப் பெறுவதற்கு முயலாதீர்கள். தெய்விக அருள் வேண்டுமெனில், திவ்யமானதைக் கொடுங்கள்: சத்தியம், தர்மம், சாந்தி, பிரேமை இவைதாம் அந்தத் திவ்யமானவை.'[9]

இந்த வேண்டுகோளைப் பகவான் பல விதமாகத் தெரிவித்திருக்கிறார். ஒரு முறை கூறினார்:

'எனக்கு அண்மையில் என்பது சரீர சம்பந்தமானதோ, ஸ்தூலமானதோ அல்ல. எனக்குப் பக்கத்திலேயே நீங்கள் உட்கார்ந்து இருந்தும் அது தூரமாகலாம்; நீங்கள் தூரத்தில் இருந்தாலும், என்னைப் பொறுத்தவரையில் அது அண்மையாகவும் அருகாமையாகவும் இருக்கும். எவ்வளவு தூரமானாலும் சத்தியம், தர்மம், சாந்தி, பிரேமை இவற்றை நீங்கள் கடைப்பிடிப்பீர்களானால் நீங்கள் எனக்கு அண்மையில் இருக்கிறீர்கள். நான் உங்களுடன் இருக்கிறேன். என்னிடம் வரும் பாதையிலே இவைதாம் மைற்கற்கள்.'[10]

பகவான் பாபாவின் அடியார்கள் இத்தகைய தெய்விக குணங்களை வாழ்வில் கடைப்பிடித்து பெருமானின் நிழலிலேயே இன்பம் காண்பதற்கு ஏங்குவர்; முயல்வர்.

ஜெய் சாய் ராம்

## பேச்சு 3 : அன்பு

அன்பார்ந்த சாயி அடியார்களே,

பகவான் பாபா அன்பு மயமானவர். சத்திய போதகராகிய அவருடைய போதனைகளிலே அன்பின் அடிப்படையில் இல்லாத அறிவுரைகளைக் காண்பது அரிதாகும்.

பகவானின் அருள் மிகுந்த அறிவுரைகள் '**சத்திய சாய் பேசுகிறார்**' (Sathya Sai Speaks) என்ற நூல் தொடரிலும், பிரேம வாஹினி, தியான வாஹினி, தர்ம வாஹினி, உப நிஷத வாஹினி, ஞான வாஹினி, வித்யா வாஹினி, கீத வாஹினி போன்ற நூல்களிலும், வேறு பல நூல்களாகவும் வெளிவந்துள்ளன; **சனாதன சாரதி** என்ற சஞ்சிகையிலே மாதா மாதம் வந்துகொண்டே இருக்கின்றன. இந்தத் தெய்வ வாக்குகள் சாயி அடியாருக்கு இப்போதே, அன்பு மயமான வாழ்வைக் காட்டுவன.

> 'தீயின் எரிக்கும் தன்மையும், நீரின் ஈரமும், சர்க்கரையின் இனிமையும் போல் வாழ்க்கையின் முழு இயல்பே அன்பு தான்.'

என்பார் பாபா.[1] எமக்கு அன்பு பொழிவதில் அவர் எங்கள் தாயாகின்றார். எங்கள் அன்பை வேண்டி, எங்கள் குற்றங்குறைகளை மன்னிக்கத் தயாராக இருக்கிறார். அவர் கூறுவதைக் கேளுங்கள் :

> 'நம்மிடத்தில் இவ்வளவு பாபம் உளதே என்று என்னிடம் வரத் தயங்காதீர்கள். உங்கள் தோஷங்கள் எவற்றைக் கண்டுமே நான் அதிர்ச்சி அடையமாட்டேன். எத்தனை தோஷத்தையும் போக்கவே வந்திருக்கிறேன். ஸாதனை எதுவும் செய்யமுடியவில்

லையே என்று துக்கப்படாதீர்கள்! சித்தத்தை ஒரு முகமாக்க முடியவில்லையா? பரவாயில்லை. எதையும் துறக்க முடியவில்லையா? பரவாயில்லை. எந்த ஸாதனையும் இயலாவிட்டாலும் பரவாயில்லை. **நான் கேட்பதெல்லாம் அன்பு என்ற ஒன்று தான்.** அன்பை அப்யஸிக்கத் தொடங்குங்கள். போதும். நான் பார்த்துக் கொள்கிறேன், உங்கள் ஆத்ம விருத்தியை.'

'நான் உங்களைத் தள்ளவே மாட்டேன். நான் உங்கள் அம்மா அல்லவோ?'[2]

ஆம், குணங்களிலே அவர் அன்பு என்றால், உறவினரில் அவர் எமது அம்மாவே.

பாபாவின் பல விதமான அற்புதங்களை நாம் படித்தும், கேட்டு அறிந்தும், அநுபவித்தும் பரவசம் அடைந்திருக்கிறோம். ஆனால் பாபா சொல்கிறார் '**அன்பு தான் எனது மிக உயர்ந்த அற்புதம்**' என்று. 'ஏனெனில் அன்பினால் மனித குலத்தில் அனைவரையுமே எம்மை நேசிக்கச் செய்ய முடியும்.'[3]

'அன்பே 'கடவுள்' என்று கூறும் ஒரு கடவுளின் அன்பு பற்றிய கருத்துக்கள் சிலவற்றை அறிந்து கொள்வதால் பெரும் பயன் அடைவோம்.

பகவான் பாபா தம்மை '**பிரேம ஸ்வரூபி**' என்று கூறி ஆனந்தம் அடைவார். சாய் அடியார்களாகிய நாம் அவரை, எல்லா மக்களுக்கும் அன்பானவரே! (**சர்வ ஜனப் பிரியாய**), அன்பே ஆத்மாவாக இருப்பவரே! (**ப்ரேமாத்மனே**), அன்பே வடிவானவரே! (**ப்ரேம மூர்த்தயே**) அன்பை அளிப்பவரே! (**ப்ரேம ப்ரதாய**), பிரியமானவரே! (**பிரியாய**), பக்தர்களிடம் பிரியமானவரே; (**பக்தப் பிரியாய**) என்ற திவ்ய திருநாமங்களில் அன்பு கூர்ந்து வணங்குகின்றோம்.

அன்பின் பகவான் பாபா அன்பு பற்றிக் கூறும் வார்த்தைகளைப் பார்ப்போம்!

முதலில் அவர் சாய் நிறுவனமாக இயங்கும் அடியார்களுக்குக் கூறியவை :-

'அன்பு மிகவும் கடினமான இதயத்தையும் கரைக்கக் கூடியது. முழுமையான தன்னலம் அற்ற அன்பில்லாத ஆத்மிக சாதனை சித்தியடைய முடியாது. அன்பில்லாவிடில் பஜனை செய்வது. நமது மூச்சை வீணாக்குதல் ஆகவும், சத்சங்கம் நேரத்தின் பயனின்மை ஆகவும், தியானம் தன்னையே ஏமாற்றுவதாகவும் அமையும். பஜனையோ, சத்சங்கமோ, தியானமோ அன்பில் தோய்ந்து செய்தால்தான், அமைதியும் ஆனந்தமும், ஞானமும் அளிக்க முடியும்.'[4]

மேலும் விளக்கமாகப் பாபா கூறுகிறார் :-

'நீங்கள் தியானம் செய்வதை ஊக்குவிக்கலாம். சொற்பொழிவுகளை ஒழுங்கு செய்யலாம், வறியோருக்கு ஆடைகள் அளிக்கலாம், வழிபாடுகள் நடத்தலாம். இவற்றின் குறிக்கோள் உங்கள் மனத்திலிருந்து அகங்காரம் ( Egoism ), பேராசை ( Greed ), விரோதம் ( Hatred ), வன்மம் ( Malice ), இச்சை ( Lust ), எரிச்சல் ( Envy ) ஆகிய குணங்களை அகற்றுவதாகவே இருக்கவேண்டும். இந்தச் செயல்களினால் நீங்கள் பெறவேண்டியது 'பரஸ்பர அன்பு' ஒன்றையே. இதுதான் சாய் அடியார்களின் அடையாளம். தெய்வத்தின் எந்த உருவத்தையாவது வணங்குபவரின் அடையாளமும் ' பரஸ்பர அன்பு ' தான்! [5]

இந்தப் 'பரஸ்பர அன்பை' த்தான் பாபா பல முறை வற்புறுத்துகின்றார். அதாவது நாம் நம்மை, நமது அயலவரை, ஊரவரை, நாட்டினரை, உலகத்தினரை நேசிக்க வேண்டும். 'நீங்கள் கடவுள் மேல் அன்பு வைத்திருப்பதானால், மனிதன் மேலும் அன்பு வைத்தல் வேண்டும், என்று பாபா கூறுவார். [6] இந்த அன்பு எப்படித் தெரிய வரும்? அது அநுதாபம், அறம், பயபக்தி, பட்சம், தியா

கம் இவற்றினால் தெரியவரும் என்று பாபா விளக்குகிறார். சாதிக் கோட்பாடுகள், இனம் பிரிவு என்ற எல்லைகளை வெறுப்பவர் பகவான்.[7] அவருக்கு 'ஒரே ஒரு சாதிதான் உண்டு; அதுவே மனித சாதி. ஒரே ஒரு மதம் தான் உண்டு; அதுவே அன்பு என்ற சம்மதம்' [8]

அன்பை வளர்ப்பதற்கும், எல்லோருடன் நட்புடன் அமைதியாக வாழ்வதற்கு பகவான் இரு முறைகளைக் கூறியிருக்கிறார்;

(1) மற்றவர்களின் குற்றங்கள் எவ்வளவு பெரியனவாக இருந்தாலும், அவற்றை அற்பமாகவும் முக்கியமற்றனவாகவும் கருதவும். உங்கள் குற்றங்கள் எவ்வளவு அற்பமாகவும் முக்கியமற்றனவாகவும் இருந்தாலும் பெரியனவாகக் கருதி, அவற்றிற்காகத் துக்கம் அடைந்து வருத்தமடையவும். இப்படிச் செய்வதால் பெரிய குற்றங்களையும் குறைபாடுகளையும் தவிர்ப்பதுடன் சகோதரத்துவத்தையும் பொறுமையையும் அடைவீர்கள்.

(2) நீங்கள் தனியாக அல்லது மற்றவர்களுடன் கூடி எது செய்தாலும், கடவுள் எங்கும் வியாபித்து உள்ளார் என்பதை ஞாபகத்தில் வைத்துச் செய்யவும். அவர் எல்லாவற்றையும் காண்கிறார்; கேட்கிறார், தெரிந்தும் கொள்கிறார்.[9] இந்த வழியைப் பின்பற்றினால் நாம் யாரையும் வெறுக்க முடியாது; அடக்கவும் மாட்டோம்.

'மனிதனைப் போற்றி நேசம் வைத்தால். அந்தநேசம் என்னை அடையும்' என்கிறார் பாபா. 'மனிதனைப் புறக்கணித்தால் என்னைப் புறக்கணிக்கிறீர்கள். கடவுளை வணங்கி, அவரது மறுபடிவமான மனிதனை அடக்குவதால் என்ன பயன்? கடவுள் மேல் அன்பு, மனிதன் மேல் அன்பு காட்டுவதாக அமைந்து, மனித சேவை மூலம் வெளிப்பட வேண்டும்.

சாதனை மூலம் பெற்ற அன்பினால் மட்டும் தான், தனி மனிதன் சரி, ஒரு இனம் சரி அமைதியைப் பெறமுடியும்' 10

பாபாவினுடைய ஒரு பிறந்த நாள் அன்று அவர் அடியார்களுக்குக் கூறினார்.

'மனிதனை நேசித்து, அவர்களின் துன்பங்களில் பங்கு கொண்டு, அவர்களுக்குச் சேவை செய்தால், அதுவே நீங்கள் சுவாமிக்குத் தரும் தகுந்த (பிறந்த நாள்) பரிசு என்று நீங்கள் மகிழ்ச்சி அடையலாம். அது மட்டும் தான் எனது விருப்பமும் ஆகும். கடவுளுக்குக் கொடுக்கும் அந்தப் பரிசு தூய்மையானதாகவும், உறுதியானதாகவும், தன்னலம் கருதாத அன்பாயும் இருத்தல் வேண்டும்.' 11

பார்த்தீர்களா, பகவான் அன்பையும் சேவையையும் எப்படிப் பிணைத்திருக்கிறார் என்று. இனிமேல், சேவை பற்றி பகவானின் ஆணைகளைத் தெரிந்திருப்பது, எமது பணியாகின்றது.

ஜெய் சாயி ராம்

## பேச்சு 4 : சேவை

அன்பார்ந்த சாயி அடியார்களே,

மனிதனின் குணங்களிலே அன்புக்கு முதலிடம் தரும் பகவான் சேவை புரிவதை அன்புடன் இரண்டறப் பிணைத்திருக்கின்றார். 'அன்பும் சேவையும் மனிதனின் இரு கண்கள் போலவும், பறவையின் இரு இறக்கைகள் போலவும் ஆகும்' என்று சமமாகக் கருதுகிறார் பாபா.[1] ஆகவே தான் 'சேவைக்குத் தேவையானது பணமோ பொருளோ அல்ல. அன்பு இதயம் தான் முதலில் வேண்டும். அன்பு நிரம்பாத இதயத்துடன் செய்த சேவைகள் எல்லாம் தூசியைப் போல உலர்ந்ததாகும்' என்பார்.[2]

அதனுடன் ஆத்ம சாதனைக்குச் சேவை செய்வது இன்றியமையாதது என்று கூறுகிறார். புட்டபர்த்தியில் சேவையாளர் வகுப்பொன்றிலே பேசும் போது 'சேவை என்பது என்ன?' என்று வினாவை எழுப்பி, அதற்குப் பகவானே விடை தருகிறார்'

'அது பக்தியின் வெளிப்பாடா? பக்தியினால் தோன்றுவதா? அல்லது அது பக்தியை உண்டாக்குவதா? அதாவது பக்தியை வெளியிட்டு அதை விருத்தியாக்கும் முறைகளில் ஒன்றா? இரண்டும் இல்லை. அது பக்தி தோன்றுனின் மூச்சே சேவை தான்; அது அவன் இயல்பு. சேவையை மிகச் சிறந்த ஆத்ம சாதனையாகக் கருதுங்கள்.......... பல நாள் ஜெபத்திலும் அல்லது தியானத்திலும் பார்க்க இதனால் உங்கள் ஆத்மிக விருத்திக்கு அதிக பலன் உண்டு.'[3]

இதனால் தான் ஆத்ம சாதனையை நாடுபவர்களுக்குச் சேவை புரிவதன் தேவையை வழக்கமாக பாபா வற்புறுத்துவார். அதனால் இரு காரியங்கள் கைகூடும் என்று கூறுவார். ஒன்று அகங்காரத்தின் அழிவு; மற்றது ஆனந்தத்தை அடைதல். 4 அகங்காரத்தை ஒருவர் நீக்குவது சேவை செய்வதற்கும், ஆத்ம சாதனையில் வெற்றி அடைவதற்கும், ஏன், அன்புடையவராக இருப்பதற்கும் அவசியம் என்பதைப் பகவான் வலியுறுத்துவார்.

இனி, சேவை செய்வதற்கு வேண்டிய தகைமைகள் குறித்து பாபாவின் அறிவுரைகள் பின்வருமாறு :

சேவை செய்வதற்குத் ' தூய்மையான இதயம் இன்றியமையாதது. அந்த இதயமானது அகந்தை, பேராசை, பொறாமை, போட்டி மனப்பான்மை ஆகியவற்றால் அசுத்தம் அடையாது இருத்தல் வேண்டும். அதனுடன், கடவுள் மேல் விசுவாசம் வேண்டும்; அதுவே ஜீவன், சீரிய பண்பு, நீதி - நேர்மை என்பனவற்றின் ஊற்றாக அமையும். எல்லோருடைய இதயத்திலும், கடவுளுக்கு நீங்கள் செய்யும் ஆராதனைதான் சேவையாகும் • 5

'சேவைக்கு இரு அடிப்படையான சிறப்புப் பண்புகள் உண்டு; அவை இரக்க உணர்ச்சியும் தியாக உணர்வும் ஆகும்' 6

' இரக்கமும் தியாகமும் உங்கள் இரு கண்களாக வேண்டும், அகங்காரம் இன்மை உங்கள் மூச்சாக வேண்டும், நாவிலே அன்பு இருக்கட்டும், காதுகளிலே சாந்தி எதிரொலிக்கட்டும்'. 7 அத்துடன் ' சேவை செய்வதற்கு ஆர்வம் மட்டும் இருந்தால் போதாது. அறிவும் செயல் திறமையும் இருக்க வேண்டும். அப்போது தான் ஒருவர் திறமை மிக்கவராகவும் பலனுள்ளவராகவும் இருப்பார் '8 எந்த விதமான தொழிலும் தொண்டு செய்வதற்கு இழிவானதல்ல. சேவையை எங்கும் எந்த முறையிலும் புரியலாம். பாபா கூறுவார் ' உங்களுடைய சேவையைப் பெறுவதற்கு ஒருவர் தகுதியுடையவரா என்று தீர்மானிக்க

வேண்டாம். அவர்கள் துன்பப்படுகிறார்களா என்று பார்க்கவும், உங்கள் சேவையைப் பெறுவதற்கு அவர்களுக்கு அதுவே தேவையாகும்.'[9] பாபா ஏற்பாடு செய்யும் சேவை முகாம்களிலே நோயுற்றோர், ஏழைகள், முதியோர், குழந்தைகளுடன் தாய்மார் இவர்களுக்கு முதலிடம் தருகிறார். அப்படிச் சேவை செய்யும் போது பாபாவின் ஆணைகள் உண்டு.

'வெகுமானத்திற்காகவோ, மற்றவர்களின் கவனத்தை ஈர்ப்பதற்காகவோ அல்லது உங்களுடைய மேம்பட்ட திறமை, செல்வம், அந்தஸ்து, அதிகாரம் இவற்றின் பெருமை உணர்வினாலோ சேவை செய்ய வேண்டாம். அன்பின் உந்துதலால் சேவை செய்யவும். அதில் நீங்கள் வெற்றி பெற்றால், அந்த வெற்றி உங்களுள் அன்பாக இருந்து ஊக்குவித்த கடவுளின் கருணையே என எண்ணுங்கள். சேவையில் தோல்வி கண்டால், அந்தத் தோல்வியை உங்கள் இயலாமை, கபடம், அறியாமை இவற்றின் மேல் சுமத்துங்கள்.'[10]

மேலும், சேவை செய்வது உங்களுக்குக் கடவுளால் தரப்பட்ட ஒரு சந்தர்ப்பம் (சான்ஸ்) என்றும், அதனால் நீங்கள் பல விதங்களில் நன்மை அடைகிறீர்கள் என்றும், பார்க்கப் போனால் அது சமூகத்திற்கு உங்கள் கடமையுமாகும் என்றும் பாபா பின்வரும் உபதேசங்கள் மூலம் விளக்குகிறார்;

'...................... சேவை செய்யும் போது நீங்கள் பலதரப்பட்ட மக்களைச் சந்திப்பீர்கள். சிலர் மிகவும் ஒத்துழைப்புத் தருவார்கள். சிலர் ஏறுமாறானவர்களாய் இருப்பார்கள், சிலர் தடுப்பார்கள், சிலர் வாதாடுவார்கள், சிலர் உங்கள் செயல் நோக்கத்தையும் அதிகார உரிமையையும் குறித்துக் கேள்விகள் எழுப்புவார்கள். இப்படியானவர்களைச் சந்திப்பது உங்களுக்கு நேர்த்தியான சிறு படிப்பினை ஆகும். அவை உங்கள் நற்பண்பை உறுதியாக்குவதுடன், பாராட்டுதலையும் நிந்தையையும் ஒரே வித மகிழ்வுடன் வரவேற்க உங்களைப் பயிற்றுகின்றன .................... (ஆகவே இது கல்வி) ....................

உங்களுடைய சொற்களும் செயலும் சத்தியத்தையும் தர்மத்தையும் அனுசரிப்பதாக இருக்குமானால், உங்கள் சொற்களும் செயலும் அன்பினால் இனிமை பெற்று, சாந்தியினால் ஒளி வீசுமானால், கவலை வேண்டாம். உங்களுக்குப் போதிய அனுக்கிரகம் (GRACE) கிடைக்கும்.'[11]

ஆகவே, இது கடவுள் தந்த சந்தர்ப்பம் என்பார் பாபா. எதற்கு, எப்படி?

'எல்லா மக்களிலும் உறைபவனாகிய கடவுளைக் காண்பதற்குச் சேவை ஒரு சந்தர்ப்பத்தை தருகின்றது: இராமர் சீதையை எந்த விதமான உதவியும் இல்லாது விடுவித்திருக்க முடியும்; ஆனால் அந்தச் சேவையை வானரக் கூட்டத்திற்கு அவர் அளிக்கச் சித்தமானார்; ஏனெனில் அந்த வாய்ப்பை உரிமையுடன் பெறுவதற்கென்று பிறந்த தேவர்கள் அவர்களாவர்.'[12]

## சமூகத்திற்கு நன்றிக் கடன்

'சமூகத்திற்கு நாமும் கடன்பட்டுள்ளோம் என்ற உணர்வில் இருந்து சேவை தொடர வேண்டும். எமது பெயர், புகழ், சுக அனுபவம் எல்லாம் சமூகத்திலிருந்தே கிடைப்பனவாகும். சமூகத்திலேயே நாம் நிறைவு காண்கிறோம். ஆகவே சமூகத்திற்கு நாம் சேவை செய்யாவிடில், வேறு யார் செய்வர்? வெறும் நன்றிக் கடனுக்காவது, சகல நன்மைகளையும் தரும் சமூகத்திற்கு மனிதன் சேவை செய்ய வேண்டும். நன்றி இல்லாத மனிதன் காட்டு மிருகங்களிலும் கேவலமாவான்.'[13]

பகவான் ஸ்ரீ சத்திய சாய்பாபாவின் அருள் மிகுந்த கண்காணிப்பிலே இயங்கும் சாய் நிறுவனங்களும், சாய் அடியார்களும் 'மனித குலம் விருத்தியடைவதற்கு ஆத்ம சாதனை, மனித மேம்பாட்டிற்கான கல்வி (Education in Human Values) சமூக சேவை என்ற மூன்று முக்கிய கோட்பாட்டு ஒழுக்கத்தில் இயங்குவது நாம் அறிந்ததே. சேவை பற்றிப் பாபாவின் இந்த அருள் வாக்குகள் நம்மை வழி நடத்துவனவாக!

ஜெய் சாய் ராம்

## பேச்சு 5 : தியானம்

அன்பார்ந்த சாயி அடியார்களே,

பகவான் பாபா கூறுகிறார்:

> நீங்கள் தெய்வம் என உங்களை நினைத்தால் நீங்கள் தெய்வம் தான்
> நீங்கள் உங்களைத் தூசி என நினைத்தால் நீங்கள் தூசி தான்.
> நிச்சயமாக எண்ணங்கள் தாம் எல்லாமே. நீங்கள் நினைப்பது போல் ஆவீர்கள்.' [1]

இதிலிருந்து மனத்திற்கும் எண்ணங்களுக்கும் பகவான் கொடுக்கும் முக்கியத்தை அடியார்கள் உணர முடியும். அத்துடன், 'கடவுளின் அதி உன்னத உள்ளகத்துடன் சேரவேண்டுமானால், ஒருவர் முதலாவதாகத் தமது உள்ளத்தை ஒரு அளவிலாவது அடைய வேண்டும்' என்பார் பாபா.

'ஏனெனில் தன்னை அறியாதவன் கடவுளை அறிய இயலாது.'[2] இதற்கு வழி தியானம் தான் என்கிறார்.

> 'மனத்தை அமைதியாகவும் ஒரு நிலையாகவும் வைத்திருப்பதற்குத் தியானம் என்ற சாதனை ஏற்படுத்தப்படுகிறது. மனத்தின் சார்புள்ளதும், சார்பற்றதுமான நிலைகளை அற்றதாக இயக்குவதற்கு தியானம் ஒரு முறையாகும்.'[3]

இனி, 'ஒருவர் தமது வாழ்வை உள்ளும் புறமும் பிரகாசம் பொருந்தியதாகத் திருத்தி அமைக்க விரும்பினால், தியானம் செய்வதே மிகவும் சிறந்த சாதனை ஆகும்.'[4]

ஒரு புத்தகத்தில் தியானம் செய்யும் முறையைப் படித்து விட்டுத் தியானம் செய்ய இயலாது. அதற்குப் பல தகைமைகள் வேண்டும். தியானம் பற்றிய பகவானின் சில கருத்துக்கள் அடியார்களுக்கு இவற்றைத் தெளிவுபடுத்தும்;

'அது (தியானம்) உணர்ச்சிகள், நரம்பின் ஊற்றுக்கள் சிந்தனையின் வேகம் ஆகியவற்றை நெறிப்படுத்தும் ஒரு கடுமையான ஒழுங்கு முறையாகும். எனவே தான் தியானமாவது, பெரிய மலைச் சாரலுக்கு மறு பக்கத்தில் இருக்கும் ஒரு அமைதியான பள்ளத்தாக்கு எனப்படும். மலையிலே ஆறு சிகரங்கள் உண்டு. அவை காமம், கோபம், பேராசை, பற்று, கர்வம் துவேஷம் என்பனவாம். ஆகவே அப்பாலுள்ள சமதரைக்குப் போவதற்கு இந்த மலைச் சாரலை ஏறிக் கடக்க வேண்டும்.'[5]

தியானத்திற்கான முறையை ஒரு நேர்த்தியான சிறு சூத்திரமாகக் கீதை நமக்குக் கற்பிக்கின்றது, என்று பகவான் பாபா ஞாபகமூட்டுகிறார்: அதாவது;

'மாம் அனுஸ்மர யுத்திய ச்ச — என்னை உன் மனத்தில் அமர்த்திப் போராடு.'

அதாவது, வாழ்க்கைப் போரிலே சண்டையிடுவதற்கு உனது உணர்வு நிலையிலே கடவுள் தான் சாரதி என்பதை ஞாபகத்தில் வை. இது அருச்சுனனுக்குக் காட்டிய வழி மட்டுமல்ல, முழு மனித குலத்திற்கே ஏற்பாடு ஆகும்.

'உனது மனத்தை என் மேல் பதித்துப் போர் புரி. நான் உனது மனவுறுதிக்குப் பின்னால் உள்ள மனவுறுதியாவேன், உன் பார்வைக்குப் பின்னால் கண்ணாவேன், உனது புத்திக்குப் பின்னால் மூளையாவேன், உனது மூச்சிற்குப் பின்னால் மூச்சாவேன். சண்டை என்னுடையது, வல்லமை என்னுடையது, முயற்சியும் வெற்றியும் என்னுடையவை, வெற்றியின் பலன்களும் என்னுடையவை.

தோல்வியின் இழுக்கும் என்னுடையவை. நீயே நான்; நானே நீ. ஒரே தன்மையை (IDENTITY) அடைதலே தியானத்தின் இலக்காகும் — அதாவது வேற்றுமையை மறுத்தல்.' [6] ஆகவே தான், பகவான் பாபாவுடனான எமது வாழ்விற்கு அத்தியாவசியமான ஒன்பது ஒழுக்க நெறிகளுள் முதற்படியிலே 'முதலாவதாகத் தியானமும் ஜபமும் தரப்பட்டுள்ளன.

சிறு பிள்ளைப் பிராயத்திலிருந்தே தியானம் அல்லது அமைதியாக இருத்தல் என்பது பயிற்றப்பட வேண்டும். ஒழுங்காக முழு மனத்துடன் இதனைக் கடைப்பிடித்தால் மனத்தை ஒரு முனைப்படுத்துவதில் விருத்தி, தோற்றத்தில் வாகு (POISE), தன்னம்பிக்கை, தன்னடக்கம், மனவுறுதி ஆகியவற்றை அடைய முடியும்.

இனி, தியானத்தின் வெற்றிக்கும் ஒருவரின் வாழ்க்கை முறைக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. பகவானின் சில அறிவுரைகள் இதை நன்கு விளக்கும்;

'மனிதன் பிறப்பிலிருந்து இறப்பு வரை வாழ்நாளிலே இரு விதமான கருமங்களில் ஈடுபடுகிறான்.

1. உணர்ச்சி சம்பந்தமானது, அதாவது பற்றுடன் பிணைக்கும் கருமங்கள் (விஷய கர்மா)
2. பற்றிலிருந்து விடுவிக்கும் கருமங்கள் (ஸ்ரெயோ கர்மா) ..............................

பிணைக்கும் கருமங்களின் செயல்கள் வெளிப் பொருட்களுடன் சம்பந்தப்பட்டவை. அவை பெரும்பாலும் நன்மை கருதியே செய்படும். பலன் நோக்கும் இந்த ஆவல் ஒருவரை 'நான்' 'எனது' என்ற சேற்றிலும், காமம், பேராசை என்ற பிசாசுகளிடையேயும் விட்டு விடும். இதனால் எவ்விதமான மகிழ்ச்சியோ மனச் சாந்தியோ கிடைக்காது.

பற்றிலிருந்து விடுவிக்கும் கருமங்களோ மிகவும் தூய்மையானவை, குற்றமற்றவை, தன்னலம் அற்றவை,

(வழி) மாறாதவை. சத்தியம், தருமம், சாந்தி, பிரேமை, ஆகிய நற்குணங்களைக் கொண்ட ஒழுக்கமுள்ளவை: அவை ஒவ்வொரு செயலின் பின்பும் அதிகமான மகிழ்ச்சியையும் அநுகூலத்தையும் அளிக்கும்.

ஆகவே துன்பங்களையும் அவற்றின் சிக்கல்களையும் கொண்ட பற்றுடன் பிணைக்கும் கருமங்களை விடுத்து, ஆத்மானந்தத்தைத் தரவல்ல பற்றிலிருந்து விடுவிக்கும் மார்க்கத்தைப் பின்பற்றுங்கள்.

'இதற்கு நல்ல முறை தியானம் ஆகும்.'[7]
மேலும், பாபா கூறுகிறார்;

> தியானத்தை விரும்புபவர் மூன்று விதங்களில் தியான பாதையை நாடுவதுண்டு; சாத்விக பாதை; ராஜஸ பாதை, தாமஸ பாதை.

## சாத்விக (ஸத்வ) பாதை

இதில் ஒருவர் ஜபம் — தியானம் இவற்றை ஒரு கடமையாகக் கருதி அவற்றிற்காக எவ்வித துன்பத்தையும் அநுபவிப்பர். நல்லதையே எப்போதும் எல்லோருக்கும் நினைப்பர், செய்வர். எப்போதும் இடையீடு இன்றி கடவுளையே மனத்தில் நினைத்துத் தியானிப்பர். ஜபம் — தியானம் இவற்றின் பலனைக்கூட யாசிக்க மாட்டார்; எல்லாவற்றையும் கடவுளிடம் விட்டுவிடுவர்.

## ராஜச பாதை

இதை நாடுபவர் தமது செய்கையின் ஒவ்வொரு நிலையிலும் பலனை யாசிப்பர். பலன் கிடையாவிடில் சாதகரைத் தளர்ச்சியும் வெறுப்பும் படிப்படியாக ஆட்கொள்ள, அவரது ஜபமும் தியானமும் மெல்லமாக வறட்சி அடையும்,

## தாமஸ பாதை

இது இன்னும் மோசமானது. இதில், ஆபத்தான வேளையிலும், ஒருவருக்கு இழப்போ, நோவோ ஏற்படும்

போதுந்தான் கடவுள் சிந்தனையில் தோன்றுவார். அப்படியான வேளையில் அவர்கள் கும்பிடுவர், பூசை, பிரசாதம் என்றும் கோவில் கட்டுவது என்றும் நேர்த்தி வைப்பார். இப்படியாகத் தியானத்தை நோக்குபவரின் மனமும் புத்தியும் ஒரு போதும் சுத்தமாக இருக்கமாட்டா.

அதிகமானோர் ராஜஸ, தாமஸ பாதைகளையே ஜபத்திற்கும் தியானத்திற்கும் கடைப்பிடிப்பர். ஜபம் — தியானம் ஆகியவற்றின் நோக்கம் மனத்தையும் புத்தியையும் புனிதப்படுத்துவதாகும். இதனை அடைவதற்கு மிகச் சிறந்த வழி சாத்விக பாதைதான்.[8]

புத்தியும் மனமும் இரட்டை மாட்டு வண்டியின் எருதுகள் போல என்பார் பாபா. அவை போகும் தெருக்களை நன்கு தெரிந்திருந்தால் பயணம் சுலபமாகவும் சுபமாகவும் இருக்கும். இந்தத் தெருக்கள் சத்தியம், தர்மம், சாந்தி, பிரேமை என்பனவாம். அவற்றைப் புத்தியும் மனமும் அறிந்திராவிடில் பயண வண்டி வழமையான சேறு சகதிகளான குழப்பம், அநீதி, கொடுமை, ஒழுக்கமின்மை, பொய் இவற்றிற்கே செல்லும். ஆகவே புத்தியும் மனமும் சரியான வழியில் ஒருவரை அழைத்துப் போக வேண்டுமானால் அவை பழக்கப்பட வேண்டும். அதற்கு முறை ஜபமும் தியானமும் ஆகும்.[9]

தியானத்தினால் தூய்மையும் மாற்றமும் அடைந்த மனத்தின் மூலமும் புத்தியின் மூலமும் ஒருவர் சச்சிதானந்தத்தைக் காண்பேரானால் அவரின் வாழ்வு புதிய பிரகாசம் அடையும் ........................ தியானத்தின் சுவையை ஒருவர் கண்டு கொண்டால், அதைப் பற்றிய எல்லா ஐயங்களையும் வாக்கு வாதங்களையும் விட்டு விடுவார். அதிலேயே முழுமையாகக் கவனம் செலுத்துவார். [10]

ஜெய் சாய் ராம்

## பேச்சு 6 : ஆத்மிக சாதனையில் 'ஓம்'

அன்பார்ந்த சாயி அடியார்களே,

'உலகிலே இப்போது உள்ள பிளவு மனப்பான்மை குரோதம் என்ற நிலையிலே, பிரசாந்தி அல்லது குழப்பம் அடையாத உள் மன அமைதியைப் பெற்றுக் கொள்வது மிகவும் வேண்டியதாகும்' என்று பகவான் கூறுகிறார்.

மேலும், 'வாழ்க்கையிலே (சம்சாரம்) மகிழ்ச்சியும் உண்டு, துயரமும் உண்டு. இவை சம்சாரம் எனும் நாணயத்தின் ஒரு பக்கமும் மறு பக்கமும் தான். சம் சாரம் என்பதில் உண்மை மிகவும் சொற்பமே'

இந்த சம்சாரத்தில் எப்போதும் உண்டு என்றும், உண்மையானது என்றும் நாம் தவறாக நினைக்கும் ஒரு மாயை உண்டு. இதனைக் கீதை கூறுவது போல் ஞானத் தீயினால்தான் அழிக்க முடியும். இந்த அறிவுத் தீயை உண்டாக்குவதற்கு ஆத்மிக சாதனை அவசியமாகும்: இது தான் ஒரே வழி என்கிறார் பாபா.

'அத்துடன் ஆத்மிகத் துறையிலே நீங்கள் என்ன செய்தாலும் அதை ஒரு ஆத்மிகப் பயிற்சியாக, முன் னேற்றத்திற்கு அதனுடைய உட் கருத்தை அறிந்து செய்ய வெண்டும்.,

ஆத்மிக பயிற்சியில் ஓர் அங்கமான 'ஓம்' என்ற பிரணவம் பற்றி பாபா கூறுவதை அறிந்து கொள்வோம்.

'ஓம் என்ற பிரணவம் மூன்று ஓசைகளினால் உண் டாவது என்று பலர் அறியார்' என்கிறார் பகவான். அதாவது அகரம் (அ), உகரம் (உ), மகரம் (ம்) என்ற

மூன்றையும் கொண்டதே 'ஓம்'. கடைசி ஓசையான 'ம்' மெல்ல மெல்ல மறைந்து அமைதியாகிறது. இந்த அமைதியை நாம் உணர்ந்து அநுபவிக்க வேண்டும். 'ஓம்' என்ற பிரணவத்திற்கு எத்தகைய மகிமைகள் உண்டு?

கடவுள் பற்றி வேதங்கள் கூறுவன, கடவுளைத் தொழும் முறைகள், இவற்றின் பொழிப்பு 'ஓம்' ஆகும். 'ஓம்' என்ற ஒரே அட்சரம் பிரமம் ஆகும். ஆகவே, 'ஓம்' என்ற பிரணவ ஜெபமும் அந்த ஆன்மிக அட்சரத்தின் மேல் தியானமும் மனத்தின் அலைமோதல்களை அடக்க உதவும்.

வானவெளியிலே நட்சத்திரங்களின் அசைவின் ஓசை 'ஓம்' ஆகும். படைப்புச் சக்தியின் ஆரம்ப காலத்திலே சூன்யத்தைச் செயற்பட வைத்தபோது வெளிப்பட்ட ஓசையும் அது தான். உண்மையில் சமநிலை ஏதாவது குழம்பும் போது அது எத்துணை நுண்ணியதாக இருப்பினும் ஓசை உண்டாகின்றது. கண் இமைக்கும் போதும் ஓசை உண்டாகின்றது. இவ்வாறு காதினால் கேட்க முடியாத ஓசைகள் ஏராளமாக உண்டு. ஆகவே படைப்பின் ஆரம்பத்தில், மூலகங்கள் தோன்றிய போது 'ஓம்' என்ற ஓசை தோன்றியிருப்பதை உங்களால் விளங்கக் கூடியதாக இருக்கும். அந்த ஓசை தான் அடிப்படையானதும் ஆதியானதும் ஆகும். நாம் இருமையான இரு உலகத்திலே வாழ்ந்து கொண்டு, இந்த இருமையை வெல்ல முயலும் போது 'சோஹம்' என்ற ஜபத்தின் மூலம் 'அவன்' என்பதை உங்களுடன் ஒருமைப்படுத்துநீர்கள். அப்போது 'நான்' என்ற உணர்வும் மறைகின்றன. நீங்கள் 'ஓம்' என்பதையே உச்சரிக்கின்றீர்கள். அதாவது 'சோஹம்' என்பதில் உள்ள 'ச' (அவன்) உம், 'ஹம்' (நான்) உம் மறைகின்றது. கிடைப்பது 'ஓம்' என்பதே. [1] மேலும், நாம் சுவாசிக்கும் போதும் 'சோஹம்', என்கிறோம். மூச்சை இழுக்கும் போது 'சோ' என்றும், வெளியே விடும் போது 'ஹம்' என்றும் ஓசை வருகிறது. அதாவது

'அவன் - நான்' என்பது ............... ஆழ்ந்த உறக்கத்தின் போது, உணர்வுகளும் மூளையும் மனமும் செயல் இழக்கும் போது அவன் - நான் வேறாக இருப்பதில்லை. 'ச' என்பதும் 'ஹம்' என்பதும் மங்கி மறைய 'சோஹம்' என்பது 'ஓம்' என மாறுகிறது. இந்நிலையில் வெளியும் உள்ளும் ஓர் உண்மையான நிலையில் ஒன்றாகின்றது.

ஆகவே - 'ஓம்' என்பதில் தியானம் செய்வது சாதனைக்கு மிகவும் பயன் தரும். நடை பழகும் பிள்ளைகளுக்கு மூன்று சக்கரத் தள்ளு வண்டியைக் கொடுப்பார்கள், தள்ளி நடப்பதற்கு. அதே போல ஆத்ம சாதனை பழகும் ஒருவருக்கு அ. உ. ம் கொண்ட 'ஓம்' என்ற மந்திரம் தான் இந்த வண்டி

'ஓம்' என்பதை நாம் உச்சரிக்கும் போது அதன் கூட்டாகிய அ, உ, ம் என்ற ஓசைகளை உணர வேண்டும். 'அ' ஓசை நாபியிலிருந்து ஆரம்பித்து, 'உ' என்று தொண்டையாலும் நாக்கின் மூலமும் வெளிவந்து, மூடிய உதடுகளிலே 'ம்ம்' என முடிகின்றது. அதை உச்சரிக்கும் போது ஓசை கூடியவரை மெல்லமாக எழுந்து (ஆரோகணித்து), அதே போல மெல்ல இறங்கி 'ம்ம்' முடிவுற்றதும் ஏற்படும் அமைதியிலே - இதயக் குகையில் அது எதிரொலிக்க வேண்டும். இப்படியாக மேலே ஏற்றுவது, கீழே பணிவது, மௌன முடிவு எல்லாம் ஒரே மூச்சில் செயல் பட வேண்டும். அதை இரு கட்டங்களாகப் பிரிக்கப்படாது

இவை எமது விழிப்பு, கனவு நிலை, உறக்கம் ஆகியவற்றையும், இந்த மூன்றிற்கும் அப்பால் உள்ள நிலையையும் குறிக்கின்றது. அதனுடன் நமது தனித்துவம் மலர்ந்து, அந்த மலர் காயாகி, பின்பு தனது ரசத்திலேயே கனியாகுவதையும், மரத்திலிருந்து அது முடிவில் விடுபவதையும் குறிக்கும்.

'ஓம்' என்பதைப் பற்றிய பாபாவின் இந்த விளக்கங்கள் சாய் அடியார்களின் சாதனையில் உதவுவனவாக.

ஜெய் சாய் ராம்

## பேச்சு 7 : நாமஸ்மரணை

அன்பார்ந்த சாயி அடியார்களே,

'ஓம்' என்ற பிரணவத்திற்கு அடுத்ததாக நாமஸ்மரணைக்குப் பகவான் முக்கியம் கொடுக்கின்றார்.

எல்லாச் சமத்தினரும் ஒரே கடவுளின் நாமத்தை ஒப்புவிப்பார்கள். சமயத்திற்குச் சமயம் கூறும் விதம் மாறுபடும். ஆனால் எல்லோருக்கும் நாமஸ்மரணையின் பலன் ஒன்று தான்.

பகவான் கூறுகிறார்:

'எல்லா நாடுகளிலும் வாழ்ந்த துறவிகள் எல்லா மொழிகளிலும் கடவுளை எண்ணற்ற பெயர்களால் கூறியுள்ளார்கள். நீங்கள் இவற்றில் எதையும் தேர்ந்து சாதனை செய்யலாம். ஒரு நாளை ஆரம்பிக்கும் போதும், நாளின் வேலைகள் முடியும்போதும் நாமத்தை ஒப்புவிக்கவும். எப்போதும் அந்த நாமம் துணையாகவும் உள்ளுணர்வாகவும் இருக்க வேண்டும். நீங்கள் தவறவோ தைரியத்தை இழக்கவோ மாட்டீர்கள். ஒவ்வொரு நொடியும் தூய்மையாகவும் திடமாகவும் வருவீர்கள்.'[1]

'இழப்பு அல்லது பெருந் துன்பத்தினால் மனம் சோர்வடைந்து இருக்கும் போது நாமஸ்மரணை செய்யவும். கடவுளின் நாமங்களை உச்சரித்து நினைவிற்குக் கொண்டு வரும்போது உங்களுக்கு ஆறுதலும் துணிவும் கிடைப்பதோடு சரியான நிலைப்பாடும் தோன்றும்.'[2]

'நாமஸ்மரணை தான் மிகவும் சக்தி வாய்ந்த ஆத்ம சாதனை. ஒவ்வொரு நாமத்திலும் அதில் உள்ள மகி

மையை நினைவில் கொள்ளுங்கள். கோபம், பொறாமை, குரோதம், வன்மம், பேராசை என்பவற்றின் பிடியிலிருந்து தப்பிக்கொள்ளவும்.'[3]

'இந்த கலியுகத்தில் ஒருவர் மோட்சம் அடைவதற்கு கடவுளின் நாமத்தைப் பாடுவதே வழி என்று சாஸ்திரங்கள் கூறியிருக்கின்றன. உண்மையில் இக் காலத்தில் நாமஸ்மரணைதான் வாழ்க்கையின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஓரே வழி' என்று பகவான் கூறுகிறார்.

'கிருத யுகத்தில் அந்த வழி தியானமாக இருந்தது. திரேத யுகத்தில் யாகமாக இருந்தது, துவாபர யுகத்தில் அருச்சனை அல்லது தொழுகையாக இருந்தது. இந்தக் கலி யுகத்தில் மனிதனை ராஜச செயல்கள் மேலோங்கிய நிலையில் ஒருவர் தியானமோ, யாகமோ, தொழுகையோ செய்ய முடிவதில்லை. ஆகவே மாயைக் கடலைக் கடப்பதற்கு நாமஸ்மரணைதான் மார்க்கம் என்று உறுதியாகக் கூறப்பட்டுள்ளது. தியானம், யாகம், தொழுகை ஆகிய சாதனங்கள், தெய்விக நாமமும் அதன் பிரேமை இனிமையும் இரண்டறக் கலக்கும் போதுதான் பயன் தரக்கூடியன.'[4]

நாமஸ்மரணைக்கு இன்னும் ஒரு விசேஷ தகுதி உண்டு என்று பாபா கூறுகிறார். அதாவது:

'யோகம், தவம் ஆகிய சாதனங்களால் சாதகருக்கு சித்திபோன்ற சக்திகள் விழிப்படையக்கூடும். இதனால் அவர் பெருமையினால் குருடராகி கடவுளையே நிராகரிக்கக்கூடும்; பெற்ற வெற்றியையும் ஆத்ம பலனையும் கைவிடவும் கூடும், நாமஸ்மரணையில் இத்தகைய ஆபத்துக்கள் இல்லை. நாமஸ்மரணை சாதகருக்கு அன்பை வளர்க்கிறது. அன்பின் மூலம் சாந்தியை அடைகிறார். சாந்தி பெற்றவருக்கு மற்ற எல்லா நலன்களும் வந்தடைகின்றன. சிறப்பான அன்பானது, யோகம், தபம் இவற்றின் அசாதாரண சக்திக்கு மேலானதாகும்.'[5]

ஆகவே.............. 'நாமத்தை அன்புடன் கூறிக் கொண்டிருக்கவும், மனக்கண்களிலே உருவத்தைப் பதிய வைக்கவும், உங்கள் இதயத்தின் உள்ளே ஒளி வீசும் விளக்கு அதுதான். உள்ளே சாந்தி, வெளியிலே பிரேமை — இதுதான் நகமஸ்மரணையில் சதா ஈடுபடும் ஒருவரின் லட்சணம்.'[5]

நாமஸ்மரணையின் இனிமையை அநுபவித்தவர் பலர். நாமஸ்மரணையின் சக்தியினால் நலன் அடைந்தவர்கள், வெற்றி பெற்றவர்கள் பலர்.

பகவான் சில உதாரணங்கள் தந்து விளக்குகிறார்;

1. நாமஸ்மரணம் பிரகலாதனைச் சித்திரவதையின் வேதனையிலிருந்து காப்பாற்றியது. அவன் ஒரு ராட்சதப் பையன். ஆனால், எப்டியோ, புனிதமான அந்தப் பெயரைக் கற்று; அதன் மதுரத்தை அறிந்து கொண்டான். யானை ஒன்று சீற்றத்துடன் அவனை நோக்கி வந்தபோதும் 'அப்பா, அம்மா' என்று அவன் தனது பெற்றோரை அழைத்துக் குளறவில்லை. அவர்களின் ஞாபகமே அவனுக்கு இருக்கவில்லை. அவன் நாராயணனைத் தவிர, வேறுயாரையும் அழைக்கவில்லை. 'நாராயணா' என்பது தான் மெலியோருக்கும் வலியோருக்கும் பலன் அளித்தது. அதி சக்தி நாராயணன் தான். ஆகவே யானை திரும்பிவிட்டது. தீயானது பிரகலாதனின் ஒரு உரோமத்தைக் கூடப் பொசுக்கவில்லை. புயல் அவனைத் தாக்கவில்லை; பாறைகள் அவனைக் காயப் படுத்தவில்லை. நஞ்சு அவனைத் தாக்கவில்லை. நாமம் தான் அவனுடைய கவசம். கேடயம், மூச்சு உயிராக இருந்தது.'[6]

2. ஆஞ்சனேயரும் நாமத்தின் வலிமையை வெளிப்படுத்தினார். நாமம் இதயத்திலே பதிந்திருக்க, நாவிலே உருள, கடலைக் கடந்தான். வழியிலே நிற்பதற்கு ஏமாற்றுக்கள், திரும்பிப் போவதற்குத் திகில்கள்

வேண்டிக் கொண்டன: ஆனால் நாமம் ஊக்கமளித்தது, முன்னால் கொண்டு சென்றது ஆகாயத்திலே சீதை இருந்த தூர இலங்கைக்கு. ஆஞ்சநேயருக்கு எஜமானின் நாமத்தைத் தவிர மனத்தில் வேறு ஒன்றிற்கும் இடம் இருக்கவில்லை. 6

3. இலங்கையிலே சீதை தனக்கு அரக்கிகளால் ஏற்பட்ட நிந்தனை, அவமதிப்பு, சித்திரவதை ஆகியவற்றைத் தைரியத்துடன் எதிர்த்ததை நாம் ஞாபகத்தில் கொள்ள வேண்டும். அந்த ஆற்றலை அவருக்கு அளித்தது எது? ராம நாமத்தைத் தவிர வேறு ஒன்றும் இல்லை.......... ராம நாமம் ராம தியானம் இவற்றின் கருமம் உங்கள் மனத்தைத் திருத்தி உருவாக்கக் கூடியது. 7

4. நாமஸ்மரணை கடவுளை உணர்வதற்கு ஒரு கருவியாகும். தியாகராஜர் தனது 20 வது வயதிலே ஸ்ரீராம ஜபத்தை தொடங்கினார். அவர் அதை 96 கோடி (CRORE) தரம் உச்சரித்தார். அந்தப் பிரதிக்ஞையை நிறைவேற்ற 21 வருடங்களும் 15 நாட்களும் எடுத்தன அதனால் அவருக்கு ஸ்ரீராம தர்சனம் கிடைத்தது, ''நாமத்தின் எழுத்துக்கள் உருவமாகின'' என்று கூறுகிறார் தியாகராஜர். 6

5. திரௌபதை மிகவும் இக்கட்டான நேரத்தில் கடவுளின் பெயரையே அழைத்தாள்.

6. மீரா கோப்பையில் உள்ள நஞ்சை விழுங்கும் போது நாவிலே நாமம் உச்சரிக்க, அது அமிர்தமாக மாறியது.

இவை சில உதாரணங்கள்.

இறைவனின் நாமம் அவரின் குணத்தைக் குறிப்பதாகும். ஆகவே எப்போதும் மனத்தில் தியானிக்கும்போது உச்சரிப்பவர் மனத்தில் அதே குணம் வளருகிறது' என்கிறார் பாபா.

ராமா, கிருஷ்ணா, யேசு, அல்லா எல்லாப் பெயர்களுமே பல முகங்களாகத் தோன்றும் ஒருவனே. ஒரு முகத்திலே கவனம் செலுத்துவதானால், மற்றவை கவனிக்காமல் விடப்படுவதில்லை; இல்லாமலும் இல்லை. எந்த நாமமும் நாமஸ்மரணைக்கு உகந்தவையாகும் என்பது தான் பகவான் பாபாவின் அறிவுரை.

எனிலும் சாய் அடியார்களுக்கு 'சாய் ராம்' என்ற நாமம் மனத்திலே வேரூன்றிய தொன்று. ஆகவே, பெரும்பாலானோர்ருக்கு 'சாய் ராம்', 'சாய் ராம்' என்ற இனிய நாமமே நாமஸ்மரணையிலும் இருந்து வாழ்விற்கு உறுதுணையாகும்.

ஜெய் சாய் ராம்.

## பேச்சு : 8 ஆசைகளைக் கட்டுப்படுத்துதல் (Ceiling of Desires)

அன்பார்ந்த சாயி அடியார்களே,

பகவான் ஒன்பது நடத்தை நெறிகளைத் தந்துள்ளார். அதில் ஒன்று — ஆசைகளைக் கட்டுப்படுத்துதலும், அதனால் சேமித்தவற்றை மனித குலத்தின் சேவைக்கு உபயோகிப்பதும் ஆகும்.

மனிதனை மற்ற மிருகங்களிலிருந்து தனித்தன்மையுடன் வைத்திருப்பது அவனுடைய பாகுபாட்டுத்திறன் (descrimination) ஆகும்.

இந்த அடிப்படையான உண்மையை அவன் உணர முடியாமல் இருக்கிறான். அவன், மிகவும் அடிப்படையான இந்த மனிதத்தன்மையை மறக்கிறான். இன்றைய மனிதன் உருவிலே மனிதனானாலும் அவனில் மனிதப்பண்பு குறைவாக உள்ளது. அவன் பணம், பலம், அதிகாரம், சுகபோக இன்பங்கள் ஆகிய உலகியல் உடைமைகளை நாடுகின்றான். மோட்சத்திற்கும் மகிழ்ச்சிக்கும், பணமும் செல்வமும் மட்டும்போதும் என நினைக்கின்றான். ஆனால் பணமும் செல்வமும்தான் அழிவின் மூல காரணிகள். பணம் எங்களைப் பராமரிப்பதில்லை; பாதுகாப்பதில்லை. ஓரளவு பணம் தேவைதான். ஆகவே மனிதன் தேவைக்கு மட்டும் போதுமான அல்லது அளவான பணத்தை வைத்துக்கொண்டு அர்த்தமுள்ள வாழ்வு நடத்தவேண்டும். ஆனால் இன்று, மனிதனின் சேவையானது, உண்மையில் அவனது எந்த நடவடிக்கையுமே பகட்டு, பெருமை, அகங்காரம் என்பனவற்றைக் கொண்

டுள்ளது. இத்தகைய சுயநலக் குணங்கள் உங்களை ஆட் கொண்டால் நீங்கள் ஆத்மாவின் தன்மையை உணர முடி யாது. ஆத்மாவின் தன்மையை உணராவிடில் மனிதத் தன்மை மலர முடியாது. மனிதத்தன்மை மலராவிடில், ஒருவரை மனிதன் என்று கூறவே முடியாது. ஒருவர் மனித உருவில் இருக்கலாம்; ஆனால் அவர் முழுமையாக மலர்ச்சி பெற்ற உணர்வுடன் கூடிய ஆன்மா அல்ல.

ஆசைகளைக் கட்டுப்படுத்துதல் என்பதன் அர்த்தம் என்ன?

மனிதன் தனது வரையறையற்ற ஆசைகளினால் மயக்கம் அடைகிறான். ஒரு கனவு உலகில் வாழ்கிறான். அவன் பரதத்துவத்தை (Super Consciousness) மறக் கின்றான், இதனால்தான் நமது ஆசைகளை அடக்க வேண்டும்; அவற்றிற்கு ஒரு எல்லையை அமைக்கவேண் டும். நாம் மிகவும் ஏராளமாகப் பணத்தைச் செலவு செய்கின்றோம். அளவுக்கு மீறி எமது இன்பத்திற்காகச் செலவு செய்வதைத் தவிர்த்து, வறியவர்களுக்கும் தேவை யுள்ளவர்களுக்கும் செலவுசெய்து அவர்கள் துன்பத்தைத் தணிக்கவேண்டும்.

ஆசைகளைக், கட்டுப்படுத்துவது என்பதன் உண்மை யான அர்த்தம் இதுதான். எனினும், பணம் கொடுப்பது மட்டும்தான் தேவையானது எல்லாம் என்று தவறாக எண்ணவேண்டாம். உங்கள் ஆசைகளைத் தொடர்ந்து வளர்த்தபடியே மற்றோருக்குக் கொடுக்கவேண்டாம். உங்கள் ஆசைகளைச் சுருக்குங்கள், ஏனெனில் இந்த உல கியல் உடமை ஆசைகள் நிம்மதியற்ற நாசமான வாழ்க் கைக்கே கொண்டு செல்லும். ஆசைகள் மறியல்வீடு. தேவைகளைக் குறைக்கும்போது மனிதன் விடுவிக்கப்படு கிறான். வாழ்க்கையின் மிகவும் அத்தியாவசிய தேவை களுக்கு மட்டுமே விருப்பம் இருக்கவேண்டும். ஆசைகளைக் குறைப்பது எப்படி?

## முதலாவது, உணவு

உண்ண வேண்டியதை மட்டுமே உண்ணவும். உணவுக்குக் கெலிப்படவேண்டாம். உங்களால் உண்ணக் கூடிய அளவிற்கு அதிகமாக எடுத்து மிகுதியை வீணாக்க வேண்டாம்; உணவை வீணாக்குவது பெரும் பாபமாகும். மிஞ்சிய உணவு இன்னும் ஒரு வயிற்றிற்கு உணவளிக்க முடியும். உணவை வீணாக்க வேண்டாம், ஏனெனில் உணவு கடவுளாகும், உயிர் கடவுளாகும், மனிதன் உணவிலிருந்து உருவாகின்றான். மனிதனின் உயிர், உடல், மனம், ஒழுக்கம் ஆகியவற்றின் முக்கிய ஊற்று உணவாகும், மனிதன் உட் கொள்ளும் உணவின் பெரும்பாலான சமிக்கமுடியாத பாகம் கழிவாகக் கழிக்கப்படுகின்றது. மிகவும் குறைந்ததும் செறிந்ததுமான பாகம் உடலினால் நுகரப்பட்டு இரத்தமாக ஓடுகின்றது. மிகவும் நுண்ணிய பாகம், மிகவும் செறிவானதும் கூட, மனத்தை உருவாக்கின்றது. ஆகவே மனமானது நாம் உட்கொள்ளும் உணவின் பிரதிபிம்பம் ஆகும். தற்போது நமது மனத்தின் மிருகத்தனமான, பிசாசுத்தனமான தன்மைகளுக்குக் காரணம் நாம் உட்கொள்ளும் உணவுதான்.

பட்சம், இரக்கம், அன்பு, பொறுமை ஆகியவற்றுக்குப் பதிலாகக் குரோதம் பந்தபாசம் முதலிய கெட்ட குணங்களையே தவறான உணவு வளர்க்கின்றது. ஆகவே நாம் உண்ணும் உணவின் தரம், மிகுந்த தூய்மையாக, மிகுந்த துப்பரவுள்ளதாக, மிகுவும் புனிதமும் சாத்விகமும் உள்ளதாக இருக்கவேண்டும். மனிதனுக்கு உண்மையான போஷனை அப்படியான உணவின் மூலமே கிடைக்கின்றது.

நாம் குடிக்கும் நீரின் பெரும் பகுதி சிறுநீராகக் கழிகின்றது. குடித்த நீரின் மிக நுண்ணிய பாகம் பிராணன் ஆக மாறுகின்றது. ஆகவே நமது உணவினதும் குடிக்கும் நீரினதும் தன்மையே எமது பண்பை நிர்ணயிக்கின்றது.

நமது உணவினதும் நீரினதும் தன்மையைக் கட்டுப்படுத்துவ தன் மூலமே நாம் தெய்விகத்தை அடையமுடியும். இதனா லேயே உணவு கடவுள் எனப்படும். ஆகவே உணவை வீணாக்குவது கடவுளை வீணாக்குவதாகும். உணவை வீணாக்காதீர்கள். தேவையானதை மட்டுமே உண்ணுங் கள்; அது சாத்வீக உணவாக இருப்பது அவசியம். மிஞ் சிய உணவைத் தேவையானவருக்கு கொடுங்கள்.

## இரண்டாவது: பணம்

இந்தியர்கள் பணத்தையும் செல்வத்தையும் இலட்சுமி தேவியாகக் கருதுவர், பணத்தைத் துஷ்பிரயோகிக் காதீர்கள். அப்படிச் செய்தால் நீங்கள் கெட்ட குணங்கள், கெட்ட எண்ணங்கள், கெட்ட பழக்கங்கள் ஆகியவற்றிற்கு அடிமையாகுவீர்கள். உங்கள் பணத்தைப் புத்தியாக நல்ல காரியங்களிற்கு உபயோகியுங்கள். பணத்தை வீணாக்காதீர்கள்; அப்படி துஷ்பிரயோகிப்பது கெடுதியாகும். உங்களை அது தவறான பாதையில் எடுத்துச் செல்லும்.

## மூன்றாவது: காலம்

மிகவும் முக்கியமானதும் மிகவும் தேவையானதுமான பொருள் காலம் ஆகும். ஒருவர் காலத்தை வீணாக்க லாகாது. நேரம் புனிதமாக்கப்படவேண்டும்; ஏனெனில் இந்தப்படைப்பில் அனைத்துமே நேரத்தில் தங்கியுள்ளன. எமது வேதங்கள் கூடக் கடவுளை காலமாகவும் காலமற் றவராகவும் கூறுகின்றன. கடவுள் காலத்தால் வரைய றுக்கப்பட்டவர் அல்ல. அவர் காலாதீதன்; அவரே காலம்.

மனிதனின் பிறப்புக்கும் இறப்புக்கும் முக்கிய காரணம் காலம் ஆகும். நாம் நேரத்தை வீணாக்கினால், எமது வாழ்க்கை வீணாகும். எனவே, நேரம் எமது வாழ்வின் முக்கிய பாகமாகும். தேவையற்ற சம்பாஷணைகளில்

நேரத்தைக் கழிப்பதன் மூலமும், மற்றவர்களின் தனிப் பட்ட அலுவல்களுடன் ஈடுபடுவதன் மூலமும் நேரத்தைக் தரங்குறைக்க வேண்டாம். 'நேரத்தை வீணாக்காதீர்' என்ற கூற்றின் உண்மை என்ன என்றால் கெடுதலான சிந்தனைகளாலும் செயல்களாலும் நேரத்தை வீணாக்க வேண்டாம் என்பதுதான். பதிலாக நேரத்தைப் பிரயோ சனமாக உபயோகியுங்கள்.

நான்காவது, சக்தி

எமது உடல், உள ஆன்மிக சக்தி வீணாக்கப்படலா காது. நீங்கள் என்னைக் கேட்கக்கூடும்: ''நாம் எவ்வாறு நமது சக்திகளை வீணாக்குகிறோம்?'' என்று, கெட்டவற் றைப் பார்ப்பது, கெட்டவற்றைக் கேட்பது, கெடுதலான வற்றைப் பேசுவது, கெடுதலான சிந்தனைகளைச் சிந் திப்பது, கெடுதலானவற்றைச் செய்வது எல்லாம் சக்தியை வீணாக்குவதாகும், இந்த ஐந்து செயல்களிலும் உங்கள் வாழ்க்கைக்கு அதிக அர்த்தம் தாருங்கள்.

கெட்டவற்றைப் பார்க்காதீர்– நல்லதையே பார்க்கவும்.

கெட்டதைக் கேட்காதீர் – நல்லதையே கேட்கவும்.

கெட்டவற்றைப் பேசாதீர் – நல்லதையே பேசவும்.

கெட்டதைச் சிந்திக்காதீர் – நல்லவற்றையே சிந்திக்கவும்

கெட்டவற்றைச் செய்யாதீர் - நல்லதையே செய்யவும்.

இதுதான் கடவுளை அடைய வழியாகும். தெய்வி கத்தின் பாதை கெட்ட எதையும் பார்க்காது, கேட்காது, பேசாது, சிந்திக்காது, செய்யாது இருப்பதுதான், இந்தப் பாதை மூலம் செல்லாவிடில் எமது சக்தியை வீணாக்கு கிறோம். இந்தச் சக்தியை வீணாக்குவதால் நாம் பல வற்றை இழக்கிறோம் — எமது ஞாப சக்தியை, புத்தியை, நல்லது கெட்டது காணும் வல்லமையை எமது நீதி நியாயத்தை எல்லாம் இழக்கின்றோம்.

இன்று மனிதனுக்கு நல்லது கெட்டது எது என்று காணும் வல்லமை இல்லை. அப்போது அவன் எப்படி நல்ல செயலில் ஈடுபட முடியும்?

நீங்கள் யோசிக்கலாம் எப்படி நாம் நேரத்தை வீணாக்குகிறோம்? அது முடியுமா என்று. ஒரு உதாரணம்; நீங்கள் ஒரு வானொலி நிகழ்ச்சியைக் கேட்கும்போது, அதன் ஒலியைக் குறைத்தாலும் சரி கூட்டினாலும் சரி, றேடியோ வேலை செய்தால். மின்சாரம் செலவழிக்கப் படுகின்றது. மனம் இந்த ரேடியோ போலத்தான். நீங்கள் மற்றவர்களுடன் பேசினாலும் சரி, உங்களுக்குள் சிந்திச் சாலும் சரி, சக்தியைச் செலவழிக்கிறீர்கள்.

உங்கள் மனம் எப்போதுமே வேலை செய்கின்றது. அது எப்போதும் வேலை செய்வதால் அதிகமான சக்தியை நீங்கள் செலவழிக்கின்றீர்கள். மனத்தை அலைக்கழியவிட்டு அந்தப் பலத்தை, சக்தியை அல்லது விசையை வீணாக்கு வதற்குப் பதிலாக, அந்த நேரத்தைப் பிரயோசனமான சிந்தனைகளை சிந்திப்பதில் உபயோகப்படுத்துவது நல்லதல்லவா?

மனிதன் எந்த முறையிலும் தனது உணவையும், பணத்தையும் நேரத்தையும் சக்தியையும் வீணாக்காமல் இருப்பதற்காகவே ஆசைக் 'கட்டுப்படுத்துதல்' என்ற திட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளது

வாழ்வை வளமாக்கவல்ல பாபாவின் இந்த வாழ்க் கைத் திட்டம் நமது வாழ்வை தெய்விகப் பாதையில் அழைத்துச் செல்லக் கூடியது.

ஜெய் சாய் ராம்.

# பேச்சு 9 : பாபாவின் பிறந்தநாள் வேண்டுகோள்கள்

அன்பார்ந்த சாயி அடியார்களே,

இன்று பகவான் ஸ்ரீ சத்திய சாய் பாபாவின் 65-வது பிறந்ததினம், (23-11-90). பகவான் பாபா 1926-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 23 ஆம் திகதி ஒரு திங்கட்கிழமை திரு அவதாரம் எடுத்தார். ஆந்திரா பிரதேசத்திலே புட்டபர்த்தி என்ற கிராமத்திலே ஸ்ரீ பெத்த வெங்கப்ப ராஜுவின் மனைவி ஈஸ்வராம்பா தெய்வத் தாயானார். வீட்டிலிருந்த இசைக் கருவிகள் தாமாகவே மங்கல ஒலி களை எழுப்பின. தெய்வக் குழந்தையின் படுக்கையின் கீழே ஒரு நாகபாம்பு மெத்தையாகி அணை கொடுத்தது.

ஒரு அற்புதர், ஆனந்தர், பேராசிரியர், அன்பானவர், அன்னை போன்றவர், அருள் அவதாரம் — உலகம் உவப்ப உதித்தார். அந்த உவப்பிலேதான் நாம் பாபாவின் பிறந்த தினத்தைக் கொண்டாடுகிறோம். இந்த ஆண்டு ஒரு முக்கியமான ஆண்டு என்பதை சாய் அடியார்கள் அறிவர். ஏனெனில் பகவான் தனது அவதாரத்தைப் பிர கடனம் செய்த 50 வது ஆண்டும் இதுவாகும். இன்றைய தினம் நமது உள்ளங்களிலே பாபாவின் பிறந்த தினமாக வும் இருக்க வேண்டும், எப்படி? பாபாவே கூறுகிறார் கேளுங்கள்;

'நான் கலண்டரில் ஒரு குறிப்பிட்ட தினத்தை எனது பிறந்த நாளாக விளிப்பதில்லை; ஏனெனில் உங்கள் இத யத்திலே என்று எனது தெய்விகம் மலர்கிறதோ, அன்று தான் உங்களுக்கு எனது பிறந்த நாள். ஆகவே நீங்கள்

எனது பிறந்த நாளைத் தனித் தனியாகத்தான் கொண்டாட வேண்டும். எப்போது எனது அறிவுரைகளைச் செயலாற்றவும், எனது ஆணைகளைப் பின்பற்றவும், எனது செய்தியைச் சேவையாக்கவும் சாதனையில் ஈடுபடவும் தீர்மானிக்கிறீர்களோ அந்த நாளே உங்களுக்கு எனது பிறந்த நாள், நான் பிறந்த நவம்பர் 23 ஆம் திகதியை நீங்கள் வழக்கம்போல் சடங்குகளுடன் கொண்டடுவதானால், அது எல்லா நாளும்போல் ஒரு நாள்தான். [1]

இன்னும் ஒரு பிறந்த நாள் வைபவத்தில் பாபா கூறினார். 'நீங்கள் ஆனந்தம் பெறும் நாள் எனது பிறந்த நாள்' என்று. லோகா சமஸ்தா சுகினோ பவந்து என்பதுதான் எனது பணியாகும். உலகத்தில் உள்ளோர் அனைவரும் மகிழ்வுடனும் ஐசுவரியத்துடனும் இருக்கட்டும் என்கிறார் பாபா. [2]

என்றாலும் கலண்டரில் இந்த நவம்பர் 23 இருக்கிறதே, அதை எப்படி சாய் அடியார்கள் ஒரு சாதாரண நாள் என்று கொள்ளமுடியும்? புனிதமாக்கும் நாளாக வைத்துக்கொண்டால் எமது மனங்களிலே சாய் உதிப்பார். கடந்த பல வருடங்களாகப் பகவான் தமது பிறந்த நாள் வைபவங்களிலே தமது பணியைப் பற்றியும், தாம் விரும்பும் பிறந்த நாள் பரிசுபற்றியும் குறிப்பிட்டிருக்கிறார். அவர் அந்த வைபவங்களில் கூறிய சிலவற்றை இந்தப் புனித நாளிலே சிந்தனைக்கு எடுத்துக் கொள்வோம்.

'பூமியில் வாழ்பவன் முதலில் மனிதனாக வரவேண்டும். பின்பு கடவுளை அடையும் பாதையைக் கற்கலாம்' என்றும்; 'நீங்கள் முதலில் மனிதனை நேசியுங்கள்; மனிதனை மதியுங்கள்' என்றும் கூறுகிறார். [3]

'மனிதர்களை நீங்கள் நேசிப்பது, அவர்களின் துன்பங்களைப் பகிர்ந்துகொள்வது. அவர்களின் சேவையில்

ஈடுபடுவது இவைதாம் சுவாமிக்கு நீங்கள் அளிக்கும் சரியான பரிசு என மகிழ்ச்சியடையலாம். நான் விரும்பும் ஒரே ஒரு பரிசு அதுதான். கடவுளுக்குத் தரப்படும் பரிசு தூய்மையான, நிலையான; சுயநலமற்ற அன்பாக இருக்க வேண்டும்.' 4

இப்படியாக மனிதனுக்கு முதலிடம் கொடுக்கின்றார் பகவான். மனிதனை அலட்சியம் செய்யுங்கள்: நீங்கள் என்னை அலட்சியப்படுத்துகிறீர்கள். கடவுளை வணங்கி, அவரது மறு வடிவமான மனிதனை அடக்குவதால் என்ன பயன்? கடவுள் மேல் அன்பு, மனிதன்மேல் அன்பாக அமைந்து மனித சேவையிலும் வெளிப்பட வேண்டும். 5

இனி, மனிதனிலேயே தெய்விகத்தைக் காணுங்கள் என்கிறார். 'பிரபஞ்சம் கடவுளின் தோற்றம். ஒவ்வொரு மனிதனிலும் கண்காணாத நுட்பமான தெய்விகம் உண்டு ஒவ்வொருவரிலும் உள்ளுறையும் தெய்விகத்தைக் காண்பதற்கு நல்லவர்களுடைய தொடர்பும் சாதனையும் அவசியமாகும்' 6

'நல்லவர்கள் மத்தியிலேதான் தெய்விக அநுபவத்தைத் தேட வேண்டும். கடவுளைக் கோவிலிலோ, புண்ணிய ஸ்தலங்களிலோ, ஒருவித தியானத்தின் போதோ காண முடியும் என்று நினைப்பது மாயை ஆகும். மனிதன் உருவில் உள்ள தெய்வத் தன்மையில்தான் நீங்கள் தெய்விகத்தை அநுபவிக்க முடியும், தெய்விகத்தை நீங்கள் கல்லிலே உணரமுடியாது.' 7

மனிதனாக வாழ்ந்து, மனிதனில் தெய்விகத்தைக் காண்பதோடு, மனிதனுக்கு சேவை செய்வதற்கு முக்கியத்துவம் கொடுக்கிறார் பகவான் சாயி பாபா. ஒரு பிறந்த நாள் விழாவிலே கூடி இருந்த அடியார்களைப் பகவான் பின்வருமாறு ஆசீர்வதித்தார்.

> 'நீங்கள் உங்கள் நாட்டினதும் உலகில் எல்லா மனிதர்களினதும் சேவைக்காக உங்கள் உடல், உள,

புத்தி, ஆன்மிக வலிமைகளையும் ஆற்றல்களையும் உபயோகிக்கவேண்டும். அதற்காக உங்களுக்கு நீண்ட ஆயுள், நல்ல ஆரோக்கியம், ஆனந்தம், சாந்தி செல்வம் எல்லாம் கிடைக்க ஆசீர்வதிக்கிறேன்.' 8

சேவை மூலம்தான் தெய்விகத்தையும் உணரச் செய்ய வேண்டும். ஆன்மிகத்தை வளர்ப்பதற்கு அதுவே வழி. பாபா கூறுகிறார்.

'பசியினால் வேதனைப்படுபவரின் காதுகளிலே ஆன்மிகத்தை ஓதினால், அது சுவறாது. முதலில் அவர் பசியை ஆற்றவும். உணவு என்ற உருவத்தில் கடவுளை அளிக்கவும். ஏக்கம் அடைந்தோருக்குச் சாந்தி என்ற உருவில் கடவுளைத் தரவும். நோயினால் வருந்துவோருக்கு மருந்தாகக் கடவுளைக் கொடுக்கவும். பயம், நோ. துன்பம் - இவற்றைத் தணிப்பதற்கு எந்த உருவிலாவது கடவுளைக் கொடுங்கள். அப்படிச் செய்யும்போதுதான் ஆன்மிகம் அவர்கள் இதயத்தில் ஊறும். மாறுபட்டுச் செய்தால் ஆன்மிக உணர்வுகளுக்குப் பதிலாக நாஸ்திகத்திற்கே ஊக்கமளிப்பீர்கள். 9

உலகில் எல்லா மக்களையும் நேசிக்க வேண்டும். அவர்களுக்கு வேண்டிய சேவை செய்யவேண்டும் என்று கூறும் பகவான் தாய் நாட்டைப் புறக்கணித்துப் பணத்திற்காக வெளிநாடுகளுக்கு ஓடுபவர்களைக் கண்டிக்கிறார்: பின்வருமாறு;

'ஏதாவது பட்டம் பெற்றதும், வாழ்விற்கு வழிதேடி அந்நிய நாடுகளுக்குப் போகும் மாணவர்களைப் பற்றி நான் என்ன கூறமுடியும்? தமது அறிவுப் பேறுகள், திறமைகள், சக்தி, கல்வி ஆகியவற்றைத் தாய் நாட்டின் சேவைக்கு உபயோகிக்காமல், பிச்சைக்காரர் போல் அன்னிய நாடுகளுக்குப் போவது, முற்றாக வருந்த வேண்டிய விஷயமல்லவா?......................பணம் வரும் போகும்,

நன்னெறி (Morality) வந்து வளரும். எமது மக்கள் தங்கள் பண்பாடு, வாழ்க்கை முறை, அடிப்படைக் கொள்கைகள் எல்லாவற்றையும் விட்டு, ஜீவனோபாயத்திற்காக மட்டும் தமது சேவையை அந்நியருக்கு விற்பது, அவர்கள் தகுதிக்கு ஏற்றதல்ல' [10]

பகவான் சுயநலத்தைக் கடுமையாகக் கண்டிப்பவர். சுயநலம் இருந்தால் அன்பு, தருமம், சத்தியம், சேவை எல்லாமே நிலைகொள்ள மாட்டா. ஒரு பிறந்த நாள் (1980) வேண்டுகோளாக அவர் வேண்டியது இதுதான்; 'உங்கள் சுயநலத்தைக் குறையுங்கள். இதுதான் எனது பிறந்த நாள் வேண்டுகோள்' என்றார்: 'அத்துடன் உங்கள் தவறான ஆசைகளைத் தணியுங்கள்; தியாக உணர்வை வளருங்கள்; உயர்ந்த மனிதராக முதிருங்கள்' [11]

தவறான, தேவை இல்லாத, மற்றவர்களுடன் போட்டியிடும் ஆசைகள்தான் சுயநலத்தை வளர்க்கின்றன. தியாக உணர்வு உள்ளவர்களுக்குச் சுயநலம் இருக்காது. சுயநலம் குறையக் குறைய மனிதன் முதிர்ச்சி அடைகின்றான்.

அதனுடன் பாபா கூறுகிறார்:

'ஆடம்பரத்தில் விருப்பம், வாழ்க்கைத் தரத்தில் மற்றவர்களை முந்துவதற்கு ஆசை, மற்றவர்களிலும் பார்க்க உயர்ந்தவர்களாகத் தோன்றுவற்கு அவா இவை தாம் மனிதனை அதிருப்தியும், ஏமாற்றமும் அடையச் செய்கின்றன. உங்கள் வாழ்க்கை முறையில் எளிமையைக் கடைப்பிடியுங்கள்; சாத்விக உணவையும் பொழுதுபோக்கையும் கொள்ளுங்கள்; சேவையின் இலட்சியங்களிலேயே உங்கள் மனம் பதியட்டும்; உங்கள் சிந்தனை சத்தியம், தர்மம், சாந்தி, பிரேமை இவற்றினால் வழி நடத்தப்படட்டும்' [12]

இந்த வார்த்தைகள் 25 வருடங்களுக்கு முன், அதாவது 1965 ஆம் வருடப் பிறந்த நாளிலே பாபா பக்தர்

களை ஆசீர்வதித்து கூறியவை. அவர் மேலும் வாழ்க்கை முறைபற்றிப் பின்வருமாறு கூறியிருக்கிறார். வாழ்க்கை முறையிலே வரையறை ஏற்படுத்தவும் கட்டுப்படுத்தவும். ஒழுங்கு செய்யவும், தடைகளையும் ஆணைகளையும் வைக்கவும். மக்கள் சிந்தனையையும், சொற்களையும், செயல்களையும் அவிழ்த்துவிட்டால் அதன் விளைவு பேராபத்தாகும்! 12

இந்த முறைகளை எல்லோருமே பேணவேண்டும் என்பார் பகவான் - முக்கியமாக அரசியல்வாதிகள், ஆள்பவர்கள். ஆளப்படுபவர்கள், சமூகத்தின் வழிகாட்டிகள் சன்னியாசிகள், மத நிலையத் தலைவர்கள், கல்விமான்கள் போன்றோர். இந்த உபதேச மொழிகளைக் கூறி 3 வருடங்களில், அதாவது 1968 ஆம் வருட பிறந்தநாள் அன்றைக்கு பாபா கூறினார்; 'உங்கள் நாக்கை அடக்குங்கள்'

'நாக்கு இருவிதங்களில் பிரயோசனப்படுகிறது; சுவையைக் கண்டு கொள்கிறது, பேசுவதற்கு உதவுகிறது. ஆகவே இரட்டிப்புக் கவனத்துடன் நாக்கை அடக்க வேண்டும், அது இரு விதங்களில் உங்களுக்குக் கெடுதி செய்யலாம்.

**நாக்கை வென்றால் வெற்றி உங்களுடையது** என்று யோக சூத்திரத்தின் ஆசிரியர் பதஞ்சலி கூறியுள்ளார். நாக்கு ஏதாவது இனிமையான தீன் பண்டங்களுக்குக் கெஞ்சும்போது. அதன் விருப்பங்களுக்கு விட்டுக்கொடுக்காது இறுக்கிப் பிடிக்கவும் .................. நாக்கு உங்கள் எஜமானாகி கெட்ட விளைவுகளை உண்டாக்காமல், அதை அடக்குவதற்கு அதுதான் வழி. இனி, நாக்கு வம்பளத்தலும் சிற்றின்பப் பேச்சிலும் கண்டிப்பாக ஈடுபடவல்லது. ஆகவே இந்தச் சுபாவத்தையும் அடக்கவேண்டும். அளவாகப் பேசுங்கள்; இனிமையாகப் பேசுங்கள்; கட்டாயம் தேவையானால், பேசவேண்டியவர்களோடு மட்டும் பேசுங்கள்: கோபம் அல்லது கிளர்ச்சி அடைந்து கத்த வேண்டாம். அத்தகைய கட்டுப்பாடு உங்கள் உடல் மனச்

சுகத்தை விருத்தி செய்யும். உங்கள் நேரத்தையும் காப்பாற்றும்; ஆகவே எனது பிரத்தியேகமான பிறந்த நாள் செய்தியாக கொள்ளவேண்டியது இதுதான்; **'உங்கள் ருசியைக் கட்டுப்படுத்துங்கள் உங்கள் பேச்சைக் கட்டுப்படுத்துங்கள்.'** 13

சாய் அடியார்களே,

இவ்வாறு பகவான் பாபா தமது பிறந்தநாள் உபதேசங்களிலும் சரி, வேறு எந்தச் சந்தர்ப்பங்களிலும் சரி அவருடைய அறிவுரைகள், வேண்டுகோள்கள் ஆணைகள் மனித குலத்தை மேம்படுத்துவதாகவே இருக்கும். சாய் அடியார்கள் பகவானின் அருள் வாக்குகளின்படி வாழ்வதன் மூலமே சாந்தியும் ஆனந்தமும் அடையமுடியும். பகவானின் உபதேசங்கள் வேதங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளவை. பாபா கூறுகிறார்:

'வேதங்கள் தாம் இந்தியாவை உருவாக்கின ............ வேதங்களுக்கு ஆரம்பமும் இல்லை, முடிவும் இல்லை, அவை சாசுவதமான நிறைமொழிகள்' ............ வேதங்கள் மேல் எனக்கு இருக்கும் பிரேமை, மனிதனின் மேல் நான் வைத்திருக்கும் பிரேமைக்கே நிகரானது.'

........ தற்போதைய வேதனைகள் முக்கியமாக வேத பாதையிலே செல்ல வேண்டியவர்களின் ஒழுக்கத் தவறுகளினால் ஏற்பட்டுள்ளன. சாஸ்திரங்களில் கூறப்பட்டுள்ள அறநிலைகளை அவமதித்ததாலும், பழைய நீதி நூல்களின் நம்பிக்கையீனத்தாலும், உண்டானவை. ஒரு விளக்கு எவ்வளவு பிரகாசமாக இருந்தாலும், ஒரு கபோதிக்கு அதனால் என்ன பிரயோசனம்? 14

இத்தகைய ஒரு காலக் கட்டத்திலேயே பகவானும் அவதாரம் எடுத்தார். அவதாரத்தின் தேவையைப் பாபா கூறுகிறார். தருமம் ஒரு புறந் தள்ளப்படும் காலத்தில் அன்பு வழியிலே அதனை மீண்டும் நிலைப்படுத்தவும்;

உலகம் முரண்பட்டுக் குழப்பத்தால் கெடும்போது சீரிய பண்பு சமாதானம் என்ற பாதையைப் புதுப்பிக்கவும்;

நல்ல மனிதர் கொடுமைக் கயிற்றினால் கட்டுண்டு குளறும்போது அவர்களை நோ, நாணம் இவற்றிலிருந்து காப்பாற்றவும்;

புனித நூல்களைச் சரியாக விளங்காது இருக்கும் போது மனித குலத்திற்கு அவற்றின் செய்தியை அறிவிக்கவும்;

பூமியைக் குற்ற மூட்டையிலிருந்து விடுவிக்கவும்;

திரேத யுகத்தின் சத்தியத்தை நிறைவேற்றவும் அச்சுதன், வாசுதேவன், ஸ்ரீ ஹரி உலகில் அவதரித்தார்.'[15]

பகவான் பாபா தர்மத்திற்காக வேண்டுபவர். 1962 ஆம் ஆண்டு பகவானின் பிறந்த நாளின்போது இந்தியா சீன ஆக்கிரமிப்பிற்கு எதிராகப் போரில் ஈடுபட்டிருந்தது. பகவான் அகில உலகிற்கும் பொதுவானவர். ஆனால் இங்கே அதர்மமாக ஒரு நாட்டின் எல்லையை இன்னொரு நாடு ஆக்கிரமித்தது. அப்போது அந்தப் பிறந்த நாளிலேயே பகவான் தமது நாட்டைக் காப்பாற்றுவதற்குத் தர்மத்திற்காகப் போராடியவர்களைக் குறிப்பிட்டார்... அவர்கள் பகைவர்களை வெளியே அனுப்பி, தமது நாட்டிற்காகப் போரிட்டார்கள். உங்கள் முதற்கடமை இறந்தவர்களுக்காகத் தொழுவதாகும், வீரத்துடன் போராடுபவர்கள் சந்தோஷமாக வெற்றியுடன் போர்க்களத்திலிருந்து திரும்புவதற்கும் தொழுங்கள் என்றார். இந்த வார்த்தைகளிலே நாம் கீதையின் மொழியையும் கேட்கிறோமல்லவா? கிருஷ்ண பகவான் இனத்தவர் மூத்தவர் ஆசிரியர் என்று பார்க்கவில்லை; எங்கே தருமம் என்றுதான் பார்த்தார். பகவான் பாபா சீனர் இந்தியர் என்று பார்க்கவில்லை; தர்மத்தை நோக்கினார்.

பாபா மேலும் கூறினார்;

'உங்களுடைய குறைகளையும் கண்டுகொண்டு விரைவில் அவற்றைத் திருத்துவதும் உங்கள் கடமையாகும்...... நம்பிக்கையை கடைப் பிடியுங்கள். கடைசி வெற்றி சத்தியம், அன்பு, நீதி, மனோபலம் இவற்றிற்குத்தான்...... மகாபாரதப் போரின்போது மக்கள் நம்பிக்கையுடன் இருந்தனர். எந்தப் பக்கத்தில் கிருஷ்ணர் இருக்கிறாரோ அங்கே வெற்றி நிச்சயம் என்ற நம்பிக்கை. கிருஷ்ணர் சத்தியத்தின் பக்கமே நிற்பார்; சத்தியம் தோல்வி தருவதில்லை ......... இந்தியா தர்மத்தைத் தன்னகத்தே கொண்டுள்ளது; அதாவது கிருஷ்ணர் அதன் பக்கத்தில் உள்ளார். வெற்றி வாகையின் கீதம் விரைவில் கேட்கும் .. ..............ஆகவே தைரியமாகவும் தன் நம்பிக்கையுடனும் இருங்கள்.' 16

நாமும் தர்மத்தின் வழியே நின்று இறந்தவர்களுக்காகத் தொழுவோம். தைரியமாகவும் நம்பிக்கையுடனும் இருப்போம். பகவான் அருளை வேண்டுகிறோம்.

ஜெய் சாய் ராம்

## REFERENCES

SSS — **Sathya Sai Speaks**, Prasanthi Nilayam

SATYAM — **SATAYAM SIVAM SUNDARAM**, Prasanthi Nilayam

SANA — Sanathana Sarathi, Prasanthi Nilayam

Prema Vahini and Dyana Vahini, Sri Sathya Sai Books and Publications Trust, Prasanthi, Nilayam


I **பகவான் பாபாவும் நல்வாழ்வும்**

1. *ரா. கணபதி, ஸ்வாமி. பூம்புகார் வெளியீடு. (1977)*
2. பகவான் ஸ்ரீ சத்யசாயி பாபாவின் அருளுரையிலிருந்து சில முத்துக்கள், யாழ். பகவான் ஸ்ரீ சத்யசாயி சேவா சமித்தி. (1989)

3 & 4 SSS XI Forward. (1988)
5 & 6 Prema Vahini, p 1 & 2 (1985)
7. SSS XI p 39 (1988)
8. Prema Vahini p 2 (1985)

II **அவதாரமும் உபதேசமும்**

1. SATYAM I P 38 — 39 (1982)
2. IBID I P 42 — 46
3. IBID I P 185 — 186
4. IBID I P 68
5, IBID I P 173
6. IBID I P 80
7. IBID I P 83
8. IBID I P 52
9. SATYAM II P 179 (1981)
10. SSS V P 354

III அன்பு

1. SSS XI P 222 (1988)
2. ரா. கணபதி, ஸ்வாமி, பக், 749
3. SSS X P 53 (1980)
4. IBID P 34
5. SSS VI P 348
6. SSS III P 136
7&8 SSS XI P 37 & 225 (1988)
9. Prema Vahini P 19 (1985)
10. SSS X P 42
11. SSS XI P 291 (1988)

IV சேவை

1. SANA JAN 88 P 10
2. SANA JAN 89 P 11
3. SSS V P 352
4. SSS VIII P 2 (1986)
5. SSS VIII P 1
6. SSS XI P 191 (1988)
7. SSS XI P 195 (1988)
8. SSS V P 134
9. SSS VII A P 209
10. SSS VII A P 58
11 & 12 SSS V P 353
13. SANA JAN 89 P 11

V தியானம்

1. Living with Baba. World Council of S. S. Organisation. Prasanthi Nilayam
2. SSS X P 277 (1980)
3. IBID X 279

4. Dyana Vahini P 7
5. SSS VII A P 264
6. SSS VII A P 267 — 68
7. Dyana Vahini P 1 — 3
8. IBID P 10 — 11
9. IBID P 4
10, IBID P 8

VI ஆத்மீக சாதனையில் 'ஓம்'

1, SSS V P 306

VII நாமஸ்மரணை

1. Namasmarana, Prasanthi Nilayam P 2
2. S. S. S. V P 335
3. IBID P 95
4. IBID
5. Namasmarana P 5
6' SSS V P 85
7. Namasnarana P 11

VIII ஆசைகளைக் கட்டுப்படுத்துதல்

Sathya Sai Newsletter (USA) Vol 13, No 3, P 3 — 8
(Quoted in Yoga in action compiled by KIRIT PATEL AND VIJAY C. AMIN Prasanthi Printers, Bombay (1989)

IX பாபாவின் பிறந்த நாள் வேண்டுகோள்கள்

| | BIRTH DAY YEAR |
|---|---|
| 1, S. S. S X P 41 — 42 | 1975 |
| 2. IBID P 229 | 1978 |
| 3. S. S. S XI P 216 | 1981 |
| 4. IBID P 291 | 1982 |

| | | | |
|---|---|---|---|
| 5 | S. S. S X | P 41 — 42 | 1975 |
| 6. | S. S. S XI | P 56 | 1980 |
| 7, | IBID | P 61 | 1980 |
| 8. | IBID | P 294 | 1982 |
| 9. | IBID | P 291 | 1982 |
| 10. | IBID | P 57 — 58 | 1980 |
| 11, | IBID | P 63 | 1980 |
| 12. | S. S. S V | P 147 — 149 | 1965 |
| 13. | S. S. S. VI | P 335 — 6 | 1968 |
| 14 | S. S. S II | P 252 — 256 | 1962 |
| 15. | S. S. S X | P 291 | 1978 |
| 16. | S S. S. II | P 269— 60 | 1962 |

ராஜன் பிரிண்டர்ஸ்
31, கியூ லேன்,
கொழும்பு - 2.